பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

C/604
Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.



முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 16 புதன்கிழமை (30.03.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 181

## கிராமங்கள் தோறும் சிறுதொழில் விருத்தி; அனைவருக்கும் சுயதொழில் வேலைவாய்ப்பு



### இதுவே எமது இலக்கு என அமைச்சர் டக்ளஸ் பேச்சு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான தேசிய வடிவமைப்பு நிலையத்தினது ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் தும்பு, மட்பாண்டம் மற்றும் புல் ஆகியவற்றின் தொழிற்பயிற்சிக் கூடங்களை அமைச்சர் டக்ளஸ தேவானந்தா அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

கொழும்பு-பத்தரமுல்லையில் தேசிய வடிவமைப்பு நிலையத்தின் வளாகத்தில் அமையப் பெற்றுள்ள மேற்படி தொழிற்பயிற்சிக் (12ஆம் பக்கம் பார்க்க)

## கட்சிதாவ முயலும் ரவி கருணாநாயக்க

### அமைச்சர் பதவி கிடைக்குமா?



(கொழும்பு)

அமைச்சர் பதவியொன்று கிடைக்கும் பட்சத்தில் ஆளுங்கட்சிக்குத் தாவ ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தயாராக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுபடுத்தும் நோக்கில் கட்சியின் தலைவருக்கு எதிராக கண்டபடி வசைபாடித் திரிந்த சஜித் பிரேமதாச ஐ.தே.க.வின் பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பது ரவி கருணாநாயக்கவைப் பொறுத்தவரை ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாக உள்ளது.

அத்துடன், கட்சியின் தலைவர் ரணில் (12ஆம் பக்கம் பார்க்க)

# கடல் வளங்களைப் பகிர்ந்து கொள்ள இணக்கம்

# சீரான வருமானம் பெற புதிய தொழில் நுட்பம்

## இந்திய-இலங்கை உயர்மட்டப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு

(புதுடில்லி)

**இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாட்டு மீனவர்களினதும் பாதுகாப்பு, அவர்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றில் குந்தகம் ஏற்படாத வகையில் கடல் வளங்களை எவ்வாறு இரு நாடுகளுக்கும் இடையில் பகிர்ந்து கொள்வது என்பது குறித்து இரு நாட்டு கூட்டுச் செயற்குழு இணக்கம் கண்டுள்ளது. இரு நாட்டு மீனவர்களது** (12ஆம் பக்கம் பார்க்க)

## புடவைக்கடைத் தொகுதி தீக்கிரை; யாழ்.நகரில் நேற்று இரவு பரபரப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர மத்தியில் திடீரெனப் பரவிய தீயினால் அங்காடிக் கடைத் தொகுதிகள் சில எரிந்து நாசமாகின.

முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள புடவைக் கடைத் தொகுதி நேற்று இரவு 7.30 மணியளவில் திடீரெனத் தீப்பற்றி எரிந்தது. (11ஆம் பக்கம் பார்க்க)

## விரைவில் புதிய வாக்காளர் பட்டியல்; மூன்றரை இலட்சம் வாக்காளர் குறையும்

### யாழில் நாடாளுமன்ற ஆசனங்கள் குறையுமா?

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தின் புதிய வாக்காளர் பட்டியல் எதிர்வரும் மே 31ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பி.குகதாசன் தெரிவித்தார். இலங்கை தேர்தல் ஆணையாளரின் உத்தரவின் பேரில் 2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை வீடு வீடாக பரிசீலனை செய்து யாழ்.மாவட்ட அரசாங்க அதிகாரிகள் புதிய பட்டியலைத் தயாரித்துள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக இந்தப் பட்டியலை வெளியிடும் பணி தாமதமாகியுள்ளது.

எவ்வாறாயினும் மே 31ஆம் திகதிக்கு முன்னர் 2010ஆம் ஆண்டுக்கான புதிய பட்டியல் வெளியிடப்படும்.

மோதல்கள் காரணமாக கடந்த (11ஆம் பக்கம் பார்க்க)

## தொழில் பாதிப்பு நிவாரணம் வழங்குமாறு மீனவர் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி மீனவர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள தொழில் பாதிப்புக்கான நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி கடற்பரப்பில் கடந்த 3 மாதங்களாக இந்திய (12ஆம் பக்கம் பார்க்க)


## பகிடிவதை புரிந்த ஆசிரிய மாணவர்கள்மீது யாழ்.நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட ஆசிரிய மாணவர்கள் பத்துப் பேர் மீது அங்கு கல்வி கற்று வரும் சிரேஷ்ட ஆசிரிய மாணவர்கள் பதினைந்து பேர் பகிடி வதையில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்து பதினைந்து ஆசிரிய மாணவர்களையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்து யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தினர்.

இச்சம்பம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் புதிதாக வெளி மாவட்டத்தில் இருந்து இணைத்துக்கொள்ளப்பட்ட ஒன்பது மாணவர்களிடமும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு மாணவரிடமும் சிரேஷ்ட மாணவர்கள் பகிடி வதையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் உளரீதியாகப் பாதிக்கப்பட்ட மாண (12ஆம் பக்கம் பார்க்க)

## கட்சியைப் பிளவுபடுத்த நினைத்தால் மக்களின் சாபம் சும்மா விடாது



### அச்சமூட்டுகிறார் ரணில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவுபடுத்த நினைப்பவர்களுக்கு பொதுமக்களின் சாபம் கிட்டும் என்பதாக கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் எந்தவொரு பதவியும் இனிவரும் (11ஆம் பக்கம் பார்க்க)

### மாணவச் செல்வங்களே

☞ உள்ளே கல்வி முரசு
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி II இன் வினாக்கள் இணைக்கப்பட்டுள்ளது.

# வட,கிழக்கில் குறிப்பிடத்தக்க வெற்றியை நல்லிணக்க ஆணைக்குழு பெற்றுள்ளது

## சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

பொறுப்புச் சொல்லும் முறைமையினை முறையாகக் கையாளவில்லையென கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மீது குற்றம் சுமத்தப்பட்டாலும், அது வடக்கு-கிழக்குப் பகுதியில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய வெற்றியைப் பெற்றுள்ளதென அனைத்துலக மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மன்னிப்புச் சபையின் ஜொலண்டா பொஸ்ரர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆணைக்குழு நடத்திய அமர்வுகளில் அப்பகுதிகளைச் சேர்ந்த பலர், தாமாக முன்வந்து சாட்சியங்களை வழங்கினர். எனினும், பெருமளவு மக்கள் சாட்சிப் பகிர்விற்கு வந்தவேளை, அதற்கான போதிய வசதிகள் இல்லாத நிலையே காணப்பட்டது. வடக்கில் இடம்பெற்ற அமர்வுகளின் போது ஆணைக்குழு நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடியது.

இதேவேளை, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கவனத்தில் எடுப்பதற்கோ, அன்றி இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக பொறுப்புச் சொல்லும் முறைமையினை ஏற்படுத்துவதற்கோ, ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக்குழு தவறிவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இரண்டாம் கட்ட கொடுப்பனவு வழங்கவில்லை உலக வங்கி வீட்டுத்திட்டப் பயனாளிகள் பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை மற்றும் அனலைதீவுப் பகுதிகளில் உலக வங்கியின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற நிரந்தர வீடுகளுக்கான இரண்டாம் கட்ட கொடுப்பனவு வழங்கபடாமையினால் அவ்வீட்டுத்திட்டப் பணிகள் தாமதமடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை, அனலைதீவுப்பகுதிகளில் இவ்வாறான 50 இற்கும் மேற்பட்ட நிரந்தர வீடுகள் அமைக்கும் ஆரம்பகட்டப் பணிகள் நிறைவடைந்த போதும் அவற்றிற்கான இரண்டாம் கட்ட கொடுப்பனவுகள் நீண்ட நாட்களாக வழங்கப்பட்டவில்லை. இதன் காரணமாக மேற்படி பகுதி மக்கள் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனைக்கு அலைந்து திரிவதாகவும் தெரிய வருகின்றஇதேவேளை அனலைதீவுப்பகுதியில் நிர்மாணிக்கப்படும் இவ்வீட்டுத்திட்டத்திற்காக கடல் கடந்து மிகுந்த கஸ்டத்தின் மத்தியில் கட்டடப் பொருட்களைக் கொண்டுவந்து முதற் கட்டவேலைகளை முடித்திருந்த போதும், அவர்களுக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பணவுகள் தாமத மடைந்து வருவது மிகுந்த வேதனையளித்துவருவதாக அம்மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். எனவே இவ்விடயம் குறித்து சம்மந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் மேலும் கேட்டுக் கொண்டுள்ளனர். (பா,14)

## ஏலத்திற்கு வருகின்றன உரிமைகோராத பொருட்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத சான்றுப்பொருட்கள் எதிர்வரும் 9ஆம் திகதி பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஏலவிற்பனைக்கு ஒரு மணித்தியாலயத்திற்கு முன்னர் பொது மக்கள் பொருட்களை பார்வையிடலாம். அத்துடன் ஏலத்தில் எடுக்கப்படும் பொருட்களுக்கான ஏலப்பெறுமதியை பணமாக உடன்செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் அன்றையதினம் பொருட்களை நீதிமன்றத்திலிருந்து அப்புறப் படுத்தவேண்டும் எனவும் நீதிமன்றப் பதிவாளர் சி.சி.வராஜசிங்கம் அறிவித்துள்ளார். (11)

## வீதி விபத்து; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சோலை அம்மன் கோயிலடியில் நேற்றுக்காலை 6.45 மணியளவில் இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் காயமடைந்துள்ளார். இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; வயோதிபர் ஒருவர் பயணம் செய்த சைக்கிளுடன் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியமையினாலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. இவ் விபத்தில் மந்துவிலைச்சேர்ந்த சின்னவன் நாகமுத்து (வயது -81) என்பவரே காயமடைந்தவராவார். இவர் சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மி,11)

## விபத்தில் காயமடைந்தவர் மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த பகுதியில் அன்றையதினம் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த நபர் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் திருநெல்வேலி கலாசாலை வீதியைச் சேர்ந்த இரத்தினம் கிருபானந் (வயது 39) என்பவரே மரணமடைந்தவராவார்.

மரண விசாரணைகளை நேரில் சென்று மேற்கொண்ட சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா. கணேசராசா பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இதேவேளை விபத்து நடந்த தினத்தன்று இது தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மறுவிசாரணை எதிர்வரும் 20 ஆம் திகதி மேற்கொள்ளப்படும் என நீதிபதி உத்தரவிட்டார்.

# யாழ்ப்பாணம் உட்பட சிலமாவட்டங்களில் வேகமாக பரவிவரும் டெங்குக் காய்ச்சல்

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

டெங்கு நோய் வேகமாக பரவுகின்ற மாவட்டங்களாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, புத்தளம். கம்பஹாமற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் மூன்று மாத காலப்பகுதியில் டெங்கு நோய்த்தாக்கத்தினால் 29 பேர் உயிரிழந்ததுடன், மேலும் இரண்டாயிரத்து 673பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் கூடுதலான மரணங்களும், பாதிக்கப்பட்டவர்களும் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவையாகும்.

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தால் 905பேரும், பெப்ரவரியில் 1050 பேரும், மார்ச் மாதத்தில் 718 பேரும் டெங்கு தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நாடளாவிய நீதியில் நடாத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது டெங்கு குடம்பிகள் வளரும் வகையிலான தமது சூழலை வைத்திருந்தார்கள் என்ற குற்றத்திற்காக ஆயிரத்து 934 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் கடந்த சனிக்கிழமை இரண்டு லட்சத்து 7ஆயிரத்து 829 வீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன. இதில் குருநாகல் மாவட்டத்தில் 31,531 வீடுக்கும் கேகாலை மாவட்டத்தில் 26922 வீடுகளும் அனுராதபுரம் மாவட்டத்தில் 26357 வீடுகளும், யாழ் மாவட்டத்தில் 10,876 வீடுகளும், கண்டியில் 10716 வீடுகளும், கொழும்பில் 8082 வீடுகளும் பரிசோதனை செய்யபபட்டதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்தது.

## சமாந்தரமான சைக்கிள் பயணம் பொலிஸாரிடம் சிக்கிய மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் சைக்கிள்களில் சமாந்தரமாகப் பயணம்செய்த ஆறு பேரினை யாழ்ப்பாண பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ஆறுபேரும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். இவ் ஆறு பேரில் 2பேர் பல்கலைக்கழக மாணவர்களாகவும் 4பேர் பாடசாலை மாணவர்களாகவும் காணப்பட்டமையால் இவ் வழக்கை விசாரித்த யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி அ. ஆனந்தராசா இவர்களை எச்சரித்து விடுதலை செய்யுமாறு தீர்ப்பளித்தார். (மி)

## தடகளப்போட்டிகள் விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலை அணிகளுக்கிடையேயான தடகளப் போட்டிகளுக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

வருடாந்தம் நடைபெறும் இந்தப் போட்டிகளில் கலந்துகொண்டு தம்மை சங்கத்தின் அங்கத்தவர்களாக பதிவு செய்த பாடசாலைகளுக்கான விண்ணப்பங்கள் மெய்வல்லுனர் சங்கத்தினால் தபால் மூலம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புகின்ற பாடசாலைகள் இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுனர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு போட்டிகளில் கலந்துகொள்வதற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் பாம்புக்கடி அதிகம்

(கிளிநொச்சி)

இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறியுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் பாம்புக் கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தருமபுரம், புளியம்பொக்கனை, பிரமந்தனாறு, ஊரியான், கோரக்கன்கட்டு, முரசுமோட்டை, பரந்தன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பாம்புக் கடிக்கு இலக்கான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் சிலர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்டப் பொதுவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இரவு வேளைகளில் வெளிச்சமின்றி காணப்படுவதாலேயே பலர் பாம்புக் கடிக்கு இலக்காவதாக தெரிவிக்கப்படுகின்றது

## புதிய நிர்வாக சபை தெரிவு

(தொல்புரம்)

வண்ணை கோம்பயன் மணல் இந்து மயான பரிபாலன சபையின் நடப்பாண்டுக்கான புதிய 15பேர் கொண்ட உறுப்பினர்கள் அண்மையில் நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பரிபாலனசபையின் புதிய நிர்வாகிகளாக, தலைவர் லயன், பி.ஆர். ரஞ்சன், செயலாளர் லயன் என். ரி.எஸ்.சுபநாதன், பொருளாளர் கே. தம்பிராஜா, உபதலைவர்களாக ஆர். செல்வவடிவேல், லயன் ஏ. வரதராஜா, உப செயலாளராக கே. ஜெயச்சந்திரனுடன் ஒன்பது அங்கத்துவ உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் உள்ளகக் கணக்காய்வாளராக எஸ்.ஆர்.லோகநாதன் கடமையாற்றவுள்ளார்.







**கோப்பாய் கலைபண்பாட்டு மன்றம் நடாத்தும் கலை பண்பாட்டு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை கிறிஸ்தவக் கல்லூரி சேனாதிராசா முதலியார் அரங்கில் நடைபெற்றது.**

**கோப்பாய் கலைபண்பாட்டு மன்றத் தலைவர் லயன் வை. தியாகராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் வலிகாமம் பிரதேச செயலர் திரு.ம.பிரதீபனும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் இ.ஐங்கரனும் கலந்துகொண்டனர். கௌரவ விருந்தினர்களாக தேசிய கல்வியல் கல்லூரி பீடாதிபதி யோகநாதனும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் கணபதிப்பிள்ளையும், கிறிஸ்தவ கல்லூரி அதிப இராசசேகரமும் கலந்துகொண்டனர்.**

உனது அறிவையும், ஆற்றலையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள். அவற்றை நீ பகிர்ந்து கொள்ளாவிட்டால், அவை உன்னையே அழித்துவிடும்.

-சாக்ரடீஸ்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## கலாசாரத்தைக் காப்பாற்றவும்

கலை, கலாசார பாரம்பரியப் பண்பாட்டு விழுமியங்களில் யாழ்ப்பாணத்து மக்கள் கொடிகட்டிப் பறந்த காலம் ஒன்று இருந்தது.

ஏனைய இனத்தவர்கள் பொறாமைப்படக்கூடிய வகையில் ஒழுக்கசீலர்களாக இருந்த மக்கள் சமூகம் இன்று அவர்கள் ஏளனம் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை கவலையளிக்கும் செயலாகவே உள்ளது.

பாரம்பரியம் மிக்க யாழ்.மண்ணில் தினமும் இடம்பெற்று வரும் "சீரழிவு"களை ஊடகங்கள் வாயிலாக அறியும்போது வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது.

இவற்றுக்கெல்லாம் காரணகர்த்தாக்கள் யார் என்று அறிய முற்படும்போது ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டித் தப்பிக்க முடியாது.

பெண்களை - குறிப்பாக இளம் பெண்களைத் தெரு வீதியில் அதிகம் காண முடியாத காலம் ஒன்றும் இருந்தது. ஆனால் இன்றுள்ள நிலையோ அதற்கு எதிர்மாறாகவுள்ளது.

கல்வியைப் பொறுத்த வரையில் அன்று பாடசாலைக் கல்வியை மட்டுமே மாணவர்கள் பெற்று வந்தார்கள். உத்தியோகத்திலும் சொற்ப வாய்ப்புகளே கிடைத்திருந்தன.

ஆனால் இன்று தனியார் கல்லூரிகளிலும் 'ரியூசன்', ஆசிரியர்களின் வீடுகளுக்குச் சென்று ரியூசன், தனிப்பட்ட வகுப்புக்கள் என்று இன்னமும் எத்தனையோ வகுப்புகளுக்கு குறிப்பாக மாணவிகள் சென்று வரவேண்டும். இவற்றுக்கெல்லாம் அவர்களே தங்களுக்குரிய பாதுகாவலனாக இருந்து வருகிறார்கள்.

இவர்களின் இத்தகைய பாதுகாப்பே அவர்களுக்கு எமனாக அமைந்து விடுகிறது. இவை பற்றி அவர்களது பெற்றோர்களோ, பாதுகாவலர்களோ உணர்ந்து கொள்ள முடியாத நிலையில் மற்றவர்களைக் குறைகூறி என்ன பயனைக் காண முடியும்.

உலக நடப்பு விவகாரங்களையும், நாகரிகமாற்றங்களையும், உலகை வலம் வந்தே அன்று பார்க்க வேண்டியிருந்தது. ஆனால் இன்று கைக்குள் அடக்கக்கூடிய கைத்தொலைபேசியூடாக சகல தேவைகளையும் செய்து முடிக்கக் கூடிய வகையில் நாடு முன்னேறியுள்ளது.

ஆலயங்களையும், கல்விக் கூடங்களையும், மையமாக வைத்து மதுபான விற்பனை நிலையங்கள் சட்டபூர்வமாக நடத்தப்பட்டு வருவதினால் எந்த வயதைச் சேர்ந்தவரும் "தீர்த்தம் ஆடிவரக் கூடிய" நிலையில், என்ன வகையான சேட்டைகளையும் விடுவதற்கு போதை தெளியும்வரை அவர்களைத் தூண்டிக் கொண்டே இருக்கும்.

வேலைவெட்டி இல்லாமல் மதுவுக்கும், போதை வஸ்துகளுக்கும் அடிமையாகித் திரியும் இளைஞர்கள் கூட்டத்தை கண்காணித்து வருவதுடன், அவர்களை சமூகத்திற்கு ஏற்றவர்களாக மாற்றியெடுக்க வேண்டிய சமூகப்பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு. இதிலிருந்து எவரும் விலகிக் கொள்ள முடியாது.

எனவே பொறுப்புள்ள பெரியோர்கள், பெற்றோர்கள் ஆசிரியர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து இச்சீரழிவுகளுக்கு முடிவுகட்ட முன்வரவேண்டும்.

அடைபட்டுக் கிடந்த சமூகத்தை அதிலிருந்து விடுவித்தமையைத் தொடர்ந்து எவரும் கண்ணை மூடிக்கொண்டு எதனையும் செய்யலாம் என்று நினைக்கக் கூடாது.

எனவே யாழ்.மண்ணின் கலாசார விழுமியங்களின் சீரழிவுகளுக்கு எவருமே துணைபோகாது சட்டத்தைக் கையில் கொண்டுள்ளவர்கள் அழிவுகளில் இருந்து சமூகத்தைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

-ஆசிரியர்-

# வன்னிக்கு வரும் வெளிநாட்டுத் தபால் பொதிகள் யாழ்.சுங்க அலுவலகத்தில் வைத்துச் சோதனை

## யாழ்.சுங்கத் திணைக்களம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பகுதிகளுக்கு வருகின்ற வெளிநாட்டுத் தபால் பொதிகள் அனைத்தும் யாழ்.சுங்கத் திணைக்கள அலுவலகத்தில் வைத்து பரீசிலக்கப்பட்டதன் பின்னர் அந்தப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்க சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வன்னிப் பகுதியில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வதியும் மக்களுக்கு வருகின்ற வெளிநாட்டுத் தபால் பொதிகளே இவ்வாறு பரிசீலிக்கப்பட்டு அந்தந்தத் தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே யாழ்.மாவட்டத்திற்கு வருகின்ற வெளிநாட்டுத் தபால் பொதிகள் யாழ்.சுங்கத் திணைக்கள அலுவலகத்தில் பரிசீலிக்கப்பட்டு தபாலகங்கள் மூலமாக விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கை தற்சமயம் வன்னிப் பகுதிக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெளிநாட்டுத் தபால் பொதிகளில் வருகின்ற கையடக்கத் தொலைபேசிகள், இலங்கைத் தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் அனுமதியையும், பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்படும் விதைகள் இலங்கைப் பகுப்பாய்வுத் திணைககளத்தினது அனுமதியும் பெற்றிருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படும் எனவும் யாழ்.சுங்கத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே வடபகுதியில் இவ்வாறான சுங்கத் திணைக்கள நடவடிக்கைகள் அனைத்தும் கொழும்பில் வைத்தே மேற்கொள்ளப்படடு வந்தது. அவை தற்சமயம் வட பகுதிக்கு இம்மாத முற்பகுதியில் இருந்து விஸ்தரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# மாணவர்களின் அர்ப்பணிப்புடனான ஆளுமையை மேம்படுத்த வேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக நிதிமுகாமைத்துவத் தலைவர்



(யாழ்ப்பாணம்)

பாடசாலை மட்டத்தில் இருந்தே மாணவர்கள் ஆளுமை விருத்தியுள்ளவர்களாக வளர்வதற்கு ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என யாழ். பல்கலைக்கழக நிதிமுகாமைத்துவத் தலைவர் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வணிக மாணவ மன்றத்தின் வணிக ஜோதியின் 23 ஆவது நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது எந்த ஒரு செயலிலும் அர்ப்பணிப்புத் தேவை. சிக்கல்கள் நிறைந்த தற்கால சூழலில் அந்தச் சிக்கல்களிலிருந்து விடுபட எமது ஒவ்வொரு செயலிலும் அர்ப்பணிப்புத் தேவை. எனவே பாடசாலை மட்டத்தில் இருந்தே மாணவர்கள் எந்தவொரு செயலிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட ஊக்குவிக்கப்பட வேண்டும். இதற்கு ஆசிரியர்களின் பங்கு அளப்பரியது.

மாணவர்களின் கற்றல், நடை, உடை, பாவனை, விளையாட்டு, நேரமுகாமைத்துவம் போன்றவற்றில் ஆளுமை விருத்தியுள்ளவர்களாகி அவர்கள் மாற்றப்பட வேண்டும். அத்துடன், மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலமான வணிகக் கல்வி புகட்டப்பட வேண்டும். அதன் மூலமாக வளர்த்தெடுக்கப்படும் மாணவர்கள்தான் போட்டிச் சூழலில் நிலைத்திருக்க முடியும்.

வணிகத் துறையில் மாணவர்கள் இன்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், பல்வேறுவிதமான போட்டிச் சூழலை எதிர்நோக்குகின்றனர். அதன் காரணமாக கால சூழ்நிலைக்கு ஏற்ப வணிக மாணவர்கள் மாற்றப்பட வேண்டும். அவ்வாறு மாற்றப்படவில்லை என்றால், அவர்களது எதிர்காலம் சிக்கலுக்குள் தள்ளப்படும்.

இதனையிட்டு நாம் விழிப்பாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்த அவர், யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், வணிகத்துறையில் தனக்கென ஒரு தடம்பதித்த பாடசாலை என்றும் தெரிவித்தார். இப்பாடசாலையில் வணிக மாணவர் மன்றத்தின் 23 ஆவது நூல் வெளிவருவது பெருமைப்பட வேண்டியதொன்றாகும் எனவும் தெரிவித்தார்.(பா)

# மண்டைதீவுப் பிரதேச வழக்குகள் யாழ்.நீதிமன்றத்தில் விசாரணை

(ஊர்காவற்றுறை)

மண்டைதீவுப் பிரதேசத்துக்குரிய வழக்கு விசாரணைகள் இனிமேல் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எல்லாத் தீவுப்பகுதிகளுக்குமுரிய முறைப்பாடுகள், வழக்கு விசாரணைகள் யாவும், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தினூடாகவும், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினூடாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

எனினும் மண்டைதீவுப் பிரதேசத்துக்குரிய வழக்கு விசாரணைகள் மட்டும் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தினூடாக மேற்கொள்ளப்படுவதுடன் முறைப்பாடுகள் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தினூடாக மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதனால் ஊர்காவற்றுறைப் பொலிஸார் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரே நேரத்தில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றால் 2 நீதிமன்றங்களுக்கும், பொலிஸார் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (14)

## இலங்கை வங்கிக் கிளைகளில் ஆளணிப் பற்றாக்குறை

(வடமராட்சி)

வடமாகாணத்தில் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை வங்கியிலிருந்து சுமார் 2 ஆயிரத்து 400 உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறவுள்ளதாக வங்கி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் 60 வயதைப் பூர்த்தி செய்தோரே இவ்வாறு ஓய்வு பெறவுள்ளதாகவும், இதனால் வட பகுதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் தற்போது ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகவும், இதனால் பலர் தமது அவரச கருமங்களை விரைவாகச் செய்து கொள்ள முடியாது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிடப் பொதுமக்கள் வங்கி நடவடிக்கைகளை இலகுவாகவும், விரைவாகவும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (100)

## கருத்தரங்கு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கான பௌதீக வளத்திரட்டுத் தொடர்பான கருத்தரங்கு 3 தினங்கள் புலோலி மெ.மி.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை பருத்தித்துறைக் கோட்டப் பாடசாலைகளுக்கும், நாளை வியாழக்கிழமை கரவெட்டிக் கோட்ட பாடசாலைகளுக்கும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மருதங்கேணி கோட்டப் பாடசாலைகளுக்கும் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கிற்கு வருகை தரும் போது அதிபர்கள் சிரேஷ்ட ஆசிரியர்களையும் அழைத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.(109)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(பருத்தித்துறை)

தாளையடி றோ.ம.கத்தோலிக்க பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் இன்று புதன் கிழமை மதியம் 12 மணியளவில் பாடசாலை அதிபர் நா.கண்ணதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பழைய மாணவர்களைத் தவறாது பங்குகொள்ளுமாறு பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (109)

# ஆசான்களையும் பெரியோர்களையும் மதிக்கும் சம்பந்தன் விருது பெற்ற பேராசிரியர் விசாகரூபன்

## தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சிவலிங்கராஜா, புகழாரம்

(யாழ்.நிருபர்)

தற்கால சூழலில் பெரும்பாலான மாணவர்கள் ஆசிரியர்களை மதிப்பதில்லை. மூத்தோரை, பெரியோரைக் கனம் பண்ணுவதில்லை. இதற்கு மாறாக பேராசிரியர் விசாக ரூபன் இன்றும் தனக்குக் கற்பித்த ஆசிரியர்களை வணங்குகின்ற, பெரியோரை மதிக்கின்ற நல்ல பண்பு நிறைந்தவர். இத்தகைய பண்பு அவரை இன்று உயர்பதவிக்கு இட்டுச் சென்றுள்ளது.

இவ்வாறு இலக்கியகலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவு "சம்பந்தன் விருது" வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா குறிப்பிட்டார்.

நல்லை ஆதீன மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் சிவலிங்கராஜா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

சிறந்த ஆக்க இலக்கிய கர்த்தாவாக விளங்கும் பேராசிரியர் விசாகரூபன் மிகச் சிறந்த நடிகர். திட்டமிட்டுப் பணியாற்றுபவர். செய்வன திருந்தச் செய்பவர். செம்மையாக, சிறப்பாக ஒரு விடயத்தைச் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவர். இளம் வயதில் பேராசிரியர் பதவிக்கு உயர்ந்துள்ளார்.

சம்பந்தர் விருது 2009 இவரது "ஈழத்தின் தமிழ் நாவல்கள் நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் பயில்நிலையும் பயன்பாடும்" என்ற நூலுக்கு இன்று வழங்கப்படுகின்றது.

பேராசிரியர்கள் கைலாசபதி, வேலுப்பிள்ளை, வித்தியானந்தன், சிவத்தம்பி போன்றவர்களின் வரிசையில் பேராசிரியர் விசாகரூபனும் சாதனைகள் பல படைத்து பிரகாசிக்க வாழ்த்துகிறேன் என்று கூறினார்.

வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபனுக்குப் பொன்னாடை போர்த்தி சம்பந்தர் விருதினை வழங்கிக் கௌரவித்தனர்.

செங்கையாழியான் க.குணராசா வரவேற்புரை நிகழ்த்தினார். பேராசிரியர் கி.விசாகரூபன் ஏற்புரை நிகழ்த்தினார். (10)



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்கள் கடந்த சனிக்கிழமை (26.03.2011) தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவின் மட்டுவில் பிரதேச மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்களுடனான கலந்துரையாடலின் போது கலந்துரையாடலில் கலந்து கொண்டோரைப் படத்தில் காண்கிறீர்கள். (69)

# யாழ்.வரும் தபால்களின் தாமதத்தை போக்க திணைக்களம் நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

தபால் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ் வரும் தபால் பொதிகள் வவுனியாவில் இருந்து அதிகாலையிலேயே யாழிற்கு எடுத்துவரப்படுவதன் காரணமாக விரைவான தபால் சேவையை யாழ்.மக்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதாக யாழ்.தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பில் இருந்து புகையிரதம் மூலமாக வவுனியாவுக்குத் தினமும் இரவு 10.00 மணியளவில் வந்து சேரும் வட பகுதி தபால் பொதிகள் வவுனியாவில் வைத்து உடனடியாகவே தரம் பிரிக்கப்பட்டு மறுநாள் அதிகாலை 3.00 மணியளவில் யாழ்.தபாலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றது.

அங்கிருந்து எடுத்துவரப்பட்டு யாழ்.தபாலகத்திற்கு காலை 7.30 மணியளவில் வந்து சேர்வதாக தபால் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் யாழ்.மக்கள் விரைவான தபால் சேவையைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஏற்கனவே இவ்வாறு வவுனியாவில் இருந்து காலை தாமதமாகவே தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டதனால் யாழ் வந்து சேர முற்பகல் 11.00 மணியைக் கடந்து விடுகின்றது. இதனால் தபால் விநியோக நடவடிக்கைகளும் தாமதமடைநது காணப்பட்டது. எனவே இந்தத் தாமத நடவடிக்கையைச் சரி செய்யும் முகமாக அதிகாலையில் இருந்தே தபால் பொதிகள் வவுனியாவில் இருந்து யாழ். எடுத்துவரப்படுவதாக தபாலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (பா)

# பேருந்துத் தரிப்பிடத்தை மாணவர்கள் துப்புரவு செய்தனர்




(தும்பளை)

தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினால் வழிநடாத்தப்படும் தமிழொலி மாணவர் மன்ற மாணவர்களால் கடந்த ஞாயிற்றுக் கிழமை(27.03.11) சிரமதானப் பணி ஒன்று மேற் கொள்ளப் பட்டது.

பருத்தித்துறை - வல்லிபுரக் கோயில் வீதியில் கற்கோவளம் சந்தைக்கு அருகாமையில் அமைந்திருக்கும் பேருந்துத் தரிப்பிடமே இவ்வாறு துப்புரவு செய்யப்பட்டது. கற்கோவளம் அபிவிருத்திச் சபையினால் அமைக்கப்பட்ட இப்பேருந்துத் தரிப்பிடம் கவனிப்பாரற்ற நிலையில் இது வரை இருந்ததைக் கவனத்திலெடுத்த திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினரின் முயற்சியினாலும் மாணவர் மன்ற மாணவர்களின் பங்களிப்பினாலும் மேற்படி சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

ஆண்டு 8 இற்குக் குறைந்த வகுப்பு மாணவர்கள் பங்குபற்றிய இச்சிரமதானப் பணி, வீதியால் சென்ற அனை வரினதும் கவனத்தை ஈர்த்தது குறிப்பிடத்தக்கது. (மா)

# பனைவளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும்

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் மூலம் நிறைந்த வருவாயைப் பெறமுடியும் என்ற நோக்குடன் பனங்கைப் பணிப் பயிற்சியைப் பெறமுன் வந்துள்ள இப்பயிலுநர்களின் நம்பிக்கை வரவேற்புக்குரியதாகும் என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

அண்மையில் விழிப்புலனற்றோர் சங்கத்தில் நடைபெற்ற பனங்கைப்பணிப் பயிற்சி நிலையதிறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

எந்த ஒரு நாட்டின் வளர்ச்சியும் அந்த நாட்டின் வளப்பயன்பாட்டினுடைய பொருளாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடையும். எமது நாட்டில் ஒவ்வொருவரும் கல்விகற்கும் போது உத்தியோகம் ஒன்றை இலக்காகக்கொண்டு பயில்கின்றனர். இதனால் வேலை இல்லாத்திண்டாட்டம் அதிகரித்துள்ளது. ஆங்காங்கே பனைவளம் நிறைந்து காணப்படுகின்றது. இவ்வளம் பயன்படுத்துவோர் இன்றி வீணாகுவது எமது பார்வையில்படும் நிகழ்வாகும். ஊட்டச்சத்து மிக்க பனங்களியிலிருந்து பானங்களையும் உணவுகளையும் தயாரிக்கலாம். ஓலையிலிருந்து 802 வகையான பாவனைப் பொருட்களை உருவாக்கலாம். இவ்வளத்தினூடாக சுயதொழில் நிறைந்த வருவாயைப் பெற்றுத்தரும் மனக்கண்ணால் உலகத்தைப் பார்க்கும் இப்பயிலுநர்கள் இப்பயிற்சிபெற முன்வந்துள்ளமை வரவேற்பிற்குரியதாகும். இவர்களுக்கான பயிற்சி முடிந்ததும் உற்பத்தியாளர்களாக இணைக்கப்பட்டு உழைப்பாளிகளாக உருவாக்கப்படுவார்கள். இவ்வருடம் பனைசார் உற்பத்திக்கென 1000 உற்பத்தியாளர்களை பனை அபிவிருத்திச் சபை இணைக்க உள்ளதாகத் தெரிவித்தார்.

விழிப்புலன் அற்றோர் சங்கத் தலைவர் திரு.ஆ.மகேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பனை அபிவிருத் திச் சபையின் விரிவாக்கல் உத்தியோகத்தர் கா.கோபால கிருஸ்ணன், சங்கப்பொருளாளர், செயலாளர் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

# இன்று கொடியேற்றம்

(நீர்வேலி)

பிரசித்தி பெற்ற நீர்வேலி கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. திருவிழாக் காலங்களில் தினமும் இரவில் விசேட சமய சொற்பொழிவுகள் இடம்பெற இருப்பதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

அதைவிட இன்று தொடக்கம் திருவிழா நிறைவு பெறும் வரை தினமும் ஆலய அன்னதான மண்டபத்தில் மகோற்சவப் பூசையும் நடைபெறும்.(வி)

# சின்னஞ் சிறு செய்திகள்

## மரவள்ளித் திருடர்கள்

(வலிகாமம்)

கோப்பாய் மற்றும் நீர்வேலி பிரதேச விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட மரவள்ளிக்கிழங்குகளைத் திருடர்கள் இரவு வேளையில் களவாடிச் செல்வதாக விவ சாயிகள் தெரிவித்தனர்.

தற்போது மரவள்ளிக் கிழங்கின் விலை அதிகரித்ததை அடுத்தே திருடர்கள் இந்தப் புதிய திருட்டு நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். திருடர்களின் இந்தத் திருட்டுச் சம்பவத்தால் விவசாயிகள் இரவில் தோட்டங்களில் காவல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (வி)

## அதிர்ஷ்டலாபச்சீட்டு

(அச்சுவேலி)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ்.மாவட்ட காரியாலய ஊழியர் நலன்புரிச் சங்கம் நடாத்தும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடாத்தப்படவுள்ளது.

ஊழியர் நலன்புரிச்சங்க வளர்ச்சிக்காக நடாத்தப்படும் இச் சீட்டிழுப்பு நிகழ்வு யாழ்.மாவட்ட அலுவலகத்தில் அடுத்த மாதம் 14 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (03)

## இன்று ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் நந்தி அவர்களின் பிறந்ததின ஒன்றுகூடல் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் இந்து மா மன்றத்தில் (UNHCR அருகில்) நடைபெற வுள்ளது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், கருத்துரைகளை யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சணமுகலிங்கன் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் சிவலிங்கராஜா, யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை டாக்டர் என்.சிவராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

## உவர் நீராகும் கிணறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நிலவும் கடும் வரட்சியால் அநேகமான நாட்களில் கிணறுகள் உவர் நீராக மாறுவதாகத் தெரிவிக்கப் பட்டது.

கடும் வரட்சி, வெப்பம் போனறவற்றின் காரணமாக நன்நீரில் உவர்த் தன்மை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூடுதலாக கடற்கரையை அண்டிய பிரதேசங்களிலும் கடும் வரட்சி ஏற்படும் இடங்களிலுமே இப்படிப்பட்ட நிலை ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப் பட்டது. (வி)

# முன்பள்ளிச் சிறார்களின் எதிர்கால வாழ்வு ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது

## சமுர்த்தி வங்கி முகாமையாளர் சசிகுமார்

(யாழ்.நிருபர்)

முன்பள்ளி ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குத் தாய், தந்தை போன்று பொறுப்புணர்வுடன் கல்வி அறிவினை ஊட்டவேண்டும். குழந்தை ஒன்று பிறந்து தாயினுடைய அரவணைப்பிலும், தந்தையின் பாதுகாப்பிலும் வளர்ந்து முதற்தடவையாக கல்விச் சமூகத்தில் சந்திப்பது முன்பள்ளி ஆசிரியரையும், மாணவர்களையும் தான். எனவே, முன்பள்ளி ஆசிரியர்களின் போதனைகள் பிள்ளையின் மனதில் சிலையில் எழுத்தாக அமைந்து விடுவதால், நல்ல கருத்துக்களைப் பிள்ளைக்குக் கூறவேண்டும்.

இவ்வாறு காரைநகர் திக்கரை முன்பள்ளிச் சிறுவர்களின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்ததிய காரைநகர் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ரி.சசிகுமார் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், இன்றைய இளைய தலைமுறையினர் தொழில்நுட்ப வளர்ச்சியைச் சாதகமாகப் பயன்படுத்தி அதிலுள்ள நல்ல விடயங்களைப் பெற்றுக்கொள்வதோடு, தீய விடயங்களையும் தேடி ஆராய்கிறார்கள். இதனால் சமூகச் சீரழிவுகளும், நெறிபிறழ்வுகளும் ஏற்படுகிறது.

முன்பள்ளிச் சிறார்களுக்கு தகவல் தொடர்பாடல் சாதனைகளை அறிமுகப்படுத்தி, அவற்றில் நல்ல விடயங்களை மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற மனப்பாங்கினைச் சிறுபராயத்திலிருந்தே ஏற்படுத்துவதற்கு முன்பள்ளி ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும்.

இன்றைய சிறுவர்களே இந்த நாட்டின் எதிர்காலத் தலைமுறையினர். அவர்களிடையே சிறந்த கல்விமான்கள, அறிஞர்கள், விஞ்ஞானிகள், அரசியற் தலைவர்கள் தோன்றவுள்ளனர். அதற்கேற்றவகையில் ஒவ்வொரு பிள்ளைக்கும் தாய்போல இருந்து இந்த ஆசிரியர்கள் பொறுப்புணர்வுடன் கல்வி ஊட்டவேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளை எதிர்காலத்தில் சிறந்த கல்விமானாக வரவேண்டுமென்ற கனவில் அதிகசுமைகளைக் கொடுத்துவிடக்கூடாது. குழந்தைகளின் மனம் பாதிப்படையக்கூடிய வகையில் நடந்து கொள்ளக்கூடாது.

ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் பிள்ளை சித்திபெறாவிட்டால் ஏதோ கௌரவக் குறைவு என நினைக்கும் பெற்றோர் அளவுக்கதிகமான சுமைகளைப் பிள்ளைகள் மீது திணித்து வருகிறார்கள். இது காலப்போக்கில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

ஒவ்வொரு குடும்பத்தவர்களுக்கும் தமது பிள்ளை கல்வி அறிவுள்ளவராக வரவேண்டுமென்று விரும்புவதில் தவறில்லை. அவர்களுக்கு அதிக சுமைகளைச் செலுத்தாது நல்ல பழக்கவழக்கங்களைச் சொல்லிக் கொடுத்து ஆன்மீகப் பற்றுள்ளவர்களாக உருவாக்க வேண்டும்.

பிள்ளைகள் கற்பதற்கு நல்ல சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, பிள்ளைகளுடன் மனம் விட்டுக் கதைக்கவேண்டும். அன்பும் பாசமும் கிடைக்க வேண்டும். பிரச்சினைகள் பற்றி விளக்கி சரி எது பிழை எது என்பதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்போது தான் ஆரோக்கியமுள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்பமுடியும் என்றார். (10)

## கடனை அடைக்க பொதுச்சபை தீர்மானம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் காணிக் கடடடங்களை விற்பனை செய்வதற்கு பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் ஆ.அப்பாத்துரை தெரிவித்தார்.

கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற சங்கப் பொதுச்சபைக் கூட்டத்தில் சங்கத்தின் கடன் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாகவும், இதன்போது சங்கக் கட்டடங்களை விற்பனை செய்வதுதான் சிறந்த வழி என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (104)

# கட்டாக்காலி கால்நடைகளால் சிறுதானியச் செய்கை பாதிப்பு

(ஆனைக்கோட்டை)

வலிகாமம் பகுதியில் நெல் அறுவடை முடிவுற்ற நிலையில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லையால் சிறுதானியப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எள்ளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்வதால் நல்லெண்ணெயின் விலையும் அதரிகரித்துச் செல்கின்றது.

இதன் காரணமாக ஆனைக்கோட்டை விவசாயிகள் தமது வயல்களைச் சுற்றி வேலிகளை அடைத்து எள்ளினை விதைத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டாக்காலிகளாகத் திரியும் ஆடு, மாடுகளை அவற்றின் உரிமையாளர்கள் கட்டி வளர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை விவசாய சம்மேளனம் மேற்கொள்ள வேண்டும் எனவும், அவ்வாறு செய்வார்களானால் எள்ளின் உற்பத்தியை அதிகரித்து நல்லெண்ணெயின் விலையைக் குறைவடையச் செய்யலாம் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (104)

# அமைதியாக நடந்தது பாலைதீவு திருநாள்

(கொக்குவில்)

இம்முறை பாலைதீவு அர்ச்.அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் 25 ஆயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் ஒன்றுகூடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு தென்பகுதி வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்கள் காணப்பட்டதாவும், அவற்றில் குளிர்பானம் மற்றும் பச்சை குத்தும் நிலையங்களை அவர்கள் நிறுவியிருந்ததாகவும் தெரியவருகிறது.

வன்னி பள்ளிக்குடா, நாச்சிக்குடா, பாலாவி போன்ற இடங்களிலிருந்தும் மன்னார், பேசாலைப் பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான பக்தர்கள் வருகை தந்திருந்தனர். (68)

# திடீரென மின்சாரம் தடைப்படுவதால் மாணவர்களின் கல்வி பாதிப்பு

(வலி.கிழக்கு)

வலி. கிழக்குப் பிரதேசத்தில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் கூடுதலாக இரவு வேளைகளிலேயே இந்த மின்சாரம் திடீர் திடீரென தடைப்படுகின்றது.

மின்சாரம் திடீரென நிற்பதால், இரவில் கல்வி கற்கும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

அதனைவிட பிரதான வீதிகளும் இருளில் மூழ்கியும் காணபடுகின்றன.

இவ்வாறு வீதிகள் இருளில் மூழ்குவதால் வீதி விபத்துக்களும் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (வி)

# தென்பகுதியிலிருந்து பெருமளவு செவ்விளநீர் எடுத்து வரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் செவ்விளநீருக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக வியாபாரிகள் தென்பகுதியில் இருந்து பெருமளவு செவ்விளநீர்களை எடுத்து வரும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குலை குலையாக எடுத்து வரப்படும் இந்த செவ்விளநீர்களுக்கு யாழ் நகரில் பெரும் கிராக்கி நிலவுகின்றது.

தற்போதைய கடும் வறட்சி வெப்பம் போன்றவற்றால் பாதிககப்பட்டிருக்கும் மக்கள் தமது தாகத்தைத் தீர்ப்பதற்கு செவ்விளநீர்களையே அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். (வி)

# ஆளணித்திரட்டுக்கு அங்கீகாரம் இன்மையால் இன்னமும் பதவிகள் நிர்ணயிக்கப்படவில்லை

(அனலைதீவு)

அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றிவரும் பணியாளர்களுக்கு ஆளணித் திரட்டு அங்கீகாரம் பெறப்படவில்லை என்று கூட்டுறவுத் திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

ஆளணித்திரட்டு அங்கீகாரம் பெறப்படாதமையால் பணியாளர்களுக்கான பதவி நிர்ணயம் எதுவும் செய்யப்படாமல் குறைந்த சம்பளத்திட்டத்திலேயே பணியாற்றி வருகின்றார்கள். இது சம்பந்தமாக, அண்மையில் சங்கத்திற்கு விஜயம் செய்த, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீகே.அருந்தவநாதன் பணியாளர் ஆளணித் திரட்டுக்கான அங்க்காரத்திற்கும், பணியாளர்களுக்குரிய பதவிகளையும், தரத்தையும் நிர்ணயம் செய்வதற்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன், தற்போது சங்கத்தில் உள்ள கிளை விற்பனை நிலையத்துடன் மேலும் ஒரு கிளை விற்பனை நிலையத்தைத் திறக்க உதவி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளதோடு, பணியாளர் தற்போது எடுத்துவரும் சம்பளத்துடன் மாதம் 500 ரூபாவினை மேலதிகமாக 2011 தை மாதம் முதல் வழங்குவதற்கும் அவர் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், வளப் பற்றாக்குறையுடன் சங்கம் இயங்கினாலும் இலாபத்துடன் இயங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



சேதமடைந்த நிலையில் காணப்படும் பூம்புகார் அ.த.க பாடசாலையின் தோற்றம் (படம்: தமிழ்வாணன்)

## ஆதினியின் இன்றைய பலன்

(30.03.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 16

இராகுகாலம் 12.13 – 1.43, சுபநேரம் 4.43 – 6.13

ஏகாதசி பி.ப.1.18, அவிட்டம் முழுவதும், மரணயோகம், ஏகாதசி விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– நம்பிக்கை மிகுதி, வாக்குக் கொடுத்தல், ஆதாயம்.

**ரிஷபம்:**– இரக்கப்படல், உதவிகள் புரிதல், மனமகிழ்ச்சி.

**மிதுனம் :**– பயனான சந்திப்பு, சுபச்செய்தி, தனவரவு.

**கடகம்:**– அச்சமான நிலை, திருடர் பயம், ஆரோக்கியக் கேடு.

**சிம்மம்:**– புத்து சாதுரியம், காரிய சித்தி, வெகுமானம்.

**கன்னி :**– நன்மை செய்தல், இரக்க மேலீடு, நல்லோர் சேர்க்கை.

**துலாம் :**– அதிக கற்பனை, முயற்சி தடங்கல், நட்டமடைதல்.

**விருச்சிகம்:**– தொழில் விருத்தி, அதிக லாபம், நல்லோர் சேர்க்கை.

**தனுசு:**– கற்பனை மிகுதி, பெரியோர் உதவி, மேன்மையான நிலை.

**மகரம்:**– காரிய சித்தி, தடை நீக்கம், பணவரவு.

**கும்பம் :**– உதவிகள் புரிதல், மேலோர் நட்பு, காரிய சித்தி.

**மீனம்:**– காரியத்தடை, அவமானப்படல், மனக் கிலேசம்.

## மொகாலியில் இன்று இரண்டாவது அரையிறுதி

# மோதலில் இந்தியா - பாகிஸ்தான்



(மொகாலி)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் இன்று மொகாலியில் நடைபெறவுள்ளது.. இதில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

மூன்றாவது முறையாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற இரு அணிகளுமே கடுமையாகப் போராடும் என்பதால் இந்த ஆட்டம் மிகுந்த விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணி லீக் ஆட்டத்தில் தென்னாப்பிரிக்காவிடம் மட்டுமே தோற்றது. அதுவும் வெற்றியின் விளிம்பு வரை சென்று தோற்றது. காலிறுதியில் அவுஸ்ரேலியாவை வீழ்த்தியது. இந்த வெற்றியால் இந்திய அணி வீரர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளனர். இந்திய அணியின் பலமே துடுப்பாட்ட வரிசை தான். இதில் ஆரம்ப வீரர் சேவாக், டெண்டுல்கர், யுவராஜ்சிங், கம்பீர் நல்ல நிலையில் உள்ளனர்.

பந்துவீச்சில் சகீர்கான் முதுகெலும்பாக உள்ளார். சிறந்த ஸ்விங் பந்து வீச்சாளரான அவர் பாகிஸ்தானுக்கு எதிராக மிகவும் முக்கியமான ஆட்டத்தில் தனது திறமையை வெளிப்படுத்தி விக்கெட்டுகளைக் கைப்பற்றவேண்டும்.

முதன்மை சுழற்பந்து வீரரான ஹர்பஜன்சிங் விக்கெட்டுகளைக் கைப்பற்ற முடியாமல் திணறுகிறார். முக்கியமான இந்த ஆட்டத்திலாவது அவர் திறமையை வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இருந்து இந்தியாவின் களத்தடுப்பு முன்னேற்றம் அடைந்துள்ளது. இதே நிலை நீடிக்க வேண்டும். பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா மூன்றாவது முறையாக இறுதிப்போட்டிக்கு நுழையுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

பாகிஸ்தான் அணியும் மூன்றாவது முறையாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும் ஆர்வத்தில் உள்ளது. 1992இல் இம்ரான் தலைமையிலான அணி இறுதிப் போட்டிக்கு நுழைந்து கிண்ணத்தை வென்றது. 1999இல் இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவிடம் தோற்றது. 1979, 1987இல் அரையிறுதியில் தோற்றது. பாகிஸ்தான் அணி லீக் ஆட்டத்தில் நியூசிலாந்திடம் மட்டுமே தோல்வியடைந்துள்ளது. இலங்கை, அவுஸ்ரேலியா போன்ற வலுவான அணிகளை வீழ்த்தியுள்ளது..



காலிறுதியில் மேற்கிந்தியத்தீவை 10 விக்கெட்டில் வெற்றிபெற்றது. இதனால் அந்த அணியும் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது.

பாகிஸ்தான் அணி பந்து வீச்சில் பலம் பெற்றுத் திகழ்கிறது. அப்ரிடி, உமர்குல், அப்துல் ரசாக், ரஹ்மான், அஜ்மல் ஹபிஸ் ஆகியோர் பந்து வீச்சில் முத்திரை பதித்து வருகின்றனர். அக்தருக்கும் வாய்ப்புக் கிடைக்குமா என்பது தெரியவில்லை. துடுப்பாட்டத்தில் ஹபீஸ், ஆசாத், மிஸ்பா, யூனுஸ்கான், அக்மல் சகோதரர்கள், அப்ரிடி ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். இந்தியாவுக்கு எல்லா வகையிலும் சவால் கொடுக்கும் வகையில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடுவார்கள். மிகவும் நெருக்கடியான இந்தப் போட்டி ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லை



(மொகாலி)

பாகிஸ்தான், இந்திய அணிகளுக்கிடையிலான இன்றைய இரண்டாவது அரையிறுதிப் போட்டி மிகுந்த விறுவிறுப்பை ஏற்படுத்தும் என்று மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் தலைவர் லொயிட் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது யுவராஜ்சிங் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி, பாகிஸ்தானை வீழ்த்தும் என்று நம்புகிறேன். டெண்டுல்கர் சிறப்பாக ஆடினால் இந்திய அணி நல்ல தொடக்கத்தைக் காண்பதுடன் அதிக ஓட்டங்களையும் குவிக்கும். அரையிறுதிப் போட்டி மிகுந்த விறுவிறுப்பாக அமையும் என்றார்.




## முன்வரிசையை வீழ்த்துவதே இலக்கு



(மொகாலி)

இந்திய அணியின் முன்வரிசை வீரர்களைவிரைவில் ஆட்டமிழக்கச் செய்து அதன் ஓட்ட வேகத்தைக் கட்டுப்படுத்துவதையே இலக்காகக் கொண்டு செயற்படுவேன் என பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் உமர் குல் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்கள் அணியின் பந்துவீச்சு சிறப்பாக உள்ளது. இதுவரை 21 விக்கெட் வீழ்த்தி, முதலிடத்தில் உள்ள தலைவர் அப்ரிடி, இந்தியாவுக்கு எதிராக சிறப்பாக செயற்படுவார் என நம்புகிறேன். சுழலில் அப்துர் ரெஹ்மான், ஹபீஸ் உள்ளிட்டோர் நம்பிக்கை அளித்து வருகின்றனர். வேகப்பந்துவீச்சில் எனது பங்களிப்பு திருப்தி அளிக்கிறது. இப்போட்டியில் அக்தர் விளையாடும் பட்சத்தில், இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி அளிக்கலாம். ஏனெனில் நிறைய அனுபவம் பெற்றுள்ள இவர், இந்தியாவுக்கு எதிராக சிறப்பாக செயற்பட்டுள்ளார். ஒருவேளை இவர் விளையாடாத பட்சத்தில், என் மீது கூடுதல் பொறுப்பு அதிகமாகும்.

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி என்றாலே ஒருவித எதிர்பார்ப்பு இருக்கத்தான் செய்யும். இப்போட்டியில் இரு அணியினருக்கும் நெருக்கடி உண்டு. ஆனால் இந்திய வீரர்களுக்கு சற்று அதிகம். ஏனெனில் சொந்த மண்ணில், உள்ளூர் ரசிகர்களின் முன்னிலையில் விளையாடுகின்றனர். லீக் மற்றும் காலிறுதியில் எங்கள் வீரர்களின் செயற்பாடு திருப்தி அளிக்கிறது. எனவே இந்தியாவுக்கு எதிராக நூறு சதவீத திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற முயற்சிப்போம் என்றார்.

## நெருக்கடியான அரையிறுதி

(மொகாலி)

இதுவரை சிறப்பாக விளையாடி அணியின் வெற்றிக்கு வித்திட்டுள்ள யுவராஜ்சிங் முக்கியமான அரையிறுதியிலும் கைகொடுப்பார் என்று நம்புகிறேன் என இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான அரையிறுதி போட்டி, இரு அணியினருக்கும் மிக முக்கியமான ஒன்று. இப்போட்டியில் இந்திய வீரர்களுக்கு சற்று நெருக்கடி அதிகமாக இருக்கும். ஏனெனில் சொந்த மண்ணில், உள்ளூர் ரசிகர்களின் முன்னிலையில் விளையாட இருப்பதால் இந்திய வீரர்கள் மீது அதிக எதிர்பார்ப்பு இருக்கும். ஆனால் இது குறித்து கவலைப்படத் தேவையில்லை. முழுத் திறமையை வெளிப்படுத்தும் பட்சத்தில் சுலபமாக வெற்றி பெறலாம்.



சொந்த ஊரில் விளையாட உள்ள யுவராஜ் சிங் மிகுந்த கவனமுடன் செயற்பட வேண்டும். துடுப்பாட்டம் செய்ய மைதானத்திற்குள் வரும் போது 'கூலாக' களமிறங்க வேண்டும். ஏனெனில் உள்ளூர் ரசிகர்கள் இவரிடம் இருந்து நிறைய எதிர்பார்ப்பார்கள். ஆனால் இது குறித்து சிந்திக்காமல், இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் போதுமானது.


## வழிவிட இதுவே தருணம்

(சிட்னி)

தலைவர் பதவியில் இருந்து விலகுவது இது தான் சரியான நேரம் என அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய அணியின் தெரிவுக்குழுவின் கூட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில் நேற்று சிட்னியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த பொண்டிங் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியின் தலைவர் பதவியில் இருந்து விலகுவது என்று முடிவு செய்துள்ளேன். தலைவர் பதவியில் இருந்து விலகுவது இது தான் சரியான நேரம். இன்னொருவருக்குத் தலைவர் பதவி வாய்ப்பு வழங்க வேண்டும் என்று கருதி இந்த முடிவை எடுத்தேன். தலைவர் பதவியில் இருந்து விலகினாலும் நான் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் தொடர்ந்து விளையாடுவேன்.



2004ஆம் ஆண்டு டெஸ்ட் அணிக்குத் தலைவராகப் பொறுப்பேற்றார். அவரது தலைமையில் 77 டெஸ்டில் 48 போட்டியில் வெற்றி கிடைத்தது. 16 டெஸ்டில் தோற்றது. 13 டெஸ்ட் சமனிலையானது. 2002ஆம் ஆண்டு ஒருநாள் போட்டித் தலைவராகப் பொறுப்பேற்றார். 227 போட்டிகளில் 163 ஆட்டத்தில் வெற்றி பெற்றது. 50 போட்டியில் தோற்றது. 2 ஆட்டம் சமனிலையில் முடிந்தது. 12 ஆட்டம் முடிவு இல்லை.

## அகலத் திரையில் கிரிக்கெட் போட்டி

(ஒட்டுசுட்டான்)

இலங்கை இராணுவத்தின் 64ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் அகலத்திரையில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது. 64 ஆவது படைப் பிரிவுப் பொறுப்பதிகாரியின் நேரடிக் கண்காணிப்பில் ஒட்டுசுட்டான் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி திரையரங்கிலேயே இப்போட்டிகள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

இவ் அகலத் திரையில் கிரிக்கெட் போட்டிகளைக் கண்டு களிப்பதற்காக, மின்சார வசதி இன்னும் ஏற்பாடு செய்யப்படாத கற்சிலைமடு, முத்தையன்கட்டு, பேராறு பகுதி கிரிக்கெட் ரசிகர்களும் 5 கிலோ மீற்றருக்கு அப்பால் இருந்து வந்து போட்டியினைப் பார்த்து ரசித்து வருவதினை அவதானிக்க முடிகின்றது.

இத்திரையரங்கு 200 ரசிகர்கள் அமர்ந்திருந்து பார்க்கக் கூடிய வசதிகள் கொண்டதாகும். (42)

## சரியான விடைகளை அனுப்பி பரிசில்களை அள்ளுங்கள்

எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப் போட்டி தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான விடைகளை அனுப்பிபெறுமதியான பரிசில்களை அள்ளுங்கள்.

1) உலகக் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டித்தொடரில், தொடர்நாயகன் விருதைப் பெறும் வீரர் யார்?

பெயர்: ..............................

முகவரி : ..............................

விடைகள் : 01) ..............................

02) ..............................

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

தினமுரசு காரியாலயம்
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தினமுரசு விளம்பரப்பணிமனை
M.P.C.S. கட்டடம்
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

விடைகளை 01 ஆம் திகதக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

# இறுதிப் போட்டியில் இலங்கை

## நியூசிலாந்தின் ஆறாவது வாய்ப்பும் கைநழுவியது



(கொழும்பு)

பத்தாவது உலகக் கிண்ணத் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியை ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்ற இலங்கை அணி மூன்றாவது முறையாக இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

கொழும்பு ஆர். பிரேமதாச விளையாட்டு மைதானத்தில் நேற்று பகலிரவு ஆட்டமாக இப் போட்டி இடம்பெற்றது.

இப்போட்டியைப் பொறுத்து இரு அணிகளுக்கும் பெரும் சவால் நிறைந்த போட்டியாகவே பார்க்கப்பட்டது.

இதில் நியூசிலாந்து அணி முதலிரண்டு உலகக் கிண்ணத் தொடர் உட்பட ஐந்து முறையாக (1975, 1979, 1992, 1999, 2007) அரையிறுதியுடன் வெளியேற்றப்பட்டது. இதற்கு முடிவு கட்டப்படும் ஆட்டமாகவே அந்த அணி வீரர்களால், அதன் ரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்டது. வலுவான தென்னாபிரிக்க அணியை காலிறுதிப் போட்டியில் வீழ்த்தியமை அதன் நம்பிகையை அதிகரிக்கச் செய்தது. அத்துடன் லீக் சுற்றுப் போட்டியில் இலங்கை அணியிடம் தோல்வியடைந்தமைக்கு பழிதீர்த்துக்கொள்ளும் வகையில் இப்போட்டியை ஆடும் என்றே அதன் ரசிகர்களால் நம்பப்பட்டது. கடந்த ஐந்து முறை அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற அணி என்ற சிறப்பைப் பெற்றிருக்கும் நாங்கள், நிச்சயம் அடுத்த கட்டத்திற்கு முன்னேறுவோம். அதற்கான ஆற்றல் எங்களிடம் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தும் வகையில் துணைத் தலைவர் ரெய்லர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இலங்கை அணி அதன் சொந்த மண்ணில் விளையாடுவதைச் சாதகமாக்கிக் கொள்ளும் என்றும், லீக் சுற்றில் நியூசிலாந்து அணியை வீழ்த்திய அனுபவம் உள்ள நிலையிலும், சொந்த மண்ணில் இறுதிப் போட்டியில் விளையாடும் முரளிதரனைக் கௌரவப்படுத்தும் வகையிலும் இலங்கை அணியின் ஆட்டம் அமையும் என அதன் ரசிகர்களால், விமர்சகர்களால் நம்பப்பட்டது. அத்துடன் தென்னாபிரிக்க அணியைத் துரத்தும் துரதிர்ஷடம் நியூசிலாந்து அணியையும் விட்டுவைக்காது என்றே எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பாடத்தீர்மானித்தது. இதற்கமைய ஆடிய இந்த அணி முதல் மூன்று விக்கெட்டுக்களையும் 32, 69, 84 என்ற ஓட்ட எண்ணிக்கையில் இழந்தது. இந்நிலையில் இணைந்த ஸ்ரைரிஸ், ரெய்லர் இணை அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தது. இருந்த போதும் இந்த இணை 77 ஓட்டங்களைப் பெற்றவேளை, பிரிக்கப்பட்டது. இறுதியில் நியூசிலாந்து அணி 48.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்ரைரிஸ் 57, ரெய்லர் 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மலிங்க, மெண்டிஸ் ஆகியோர் தலா மூன்று, முரளிதரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 218 என்ற வெற்றி இலக்கு நோக்கி ஆடிய இலங்கை அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றபோதும் முதலாவது விக்கெட்டை 40 ஓட்டங்களைப் பெற்றபோது இழந்தது. பின்னர் இணைந்த டில்சான், அணித் தலைவர் சங்கக்கார ஜோடி அணியை வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் மிகச் சிறப்பாக ஆடினர். இந்த இணை 120 ஓட்டங்களை இணைப்பாட்டமாக அணி 160 ஓட்டங்களைப் பெற்றவேளை டில்சான் ஆட்டமிழந்தார். தொடர்ந்து 161, 164, 185 ஓட்டங்களுக்கு இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டது. இந்நிலையில் தென்னாபிரிக்க அணியை காலிறுதியில் எவ்வாறு வெற்றிகொண்டார்களோ அதேபோன்று இப்போட்டியில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முதல் முறையாக முன்னேறும் வாய்ப்பை நியூசிலாந்து அணி பெற்றுக் கொள்ளும் என அதன் ரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் தாயக மண்ணில் இறுதிப் போட்டியில் ஆடிய முரளிதரன் டெஸ்ட் போட்டியில் தனது இறுதிப் பந்து வீச்சில் விக்கெட்டை வீழ்த்தியது போன்று இந்தப் போட்டியிலும் இறுதிப் பந்தில் விக்கெட்டை வீழ்த்தினார். இதுவே முரளிதரனுக்கும் இறுதிப் போட்டியாக அமையும் அதேவேளை, இலங்கை அணியின் கனவும் கலைக்கப்படுமோ என்ற அச்ச நிலை அதன் ரசிகர்களுக்கு எழுந்திருக்கும்.

இருப்பினும் இறுதியில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த சமரவீர, மத்தியூஸ் இணை பொறுப்புடன் ஆடி அணியின் வெற்றிக்குத் துணை



புரிந்தனர். இறுதியில் 47.5 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது இலங்கை அணி. இதில் 73 ஓட்டங்களைப் பெற்ற டில்சான், இத்தொடரில் நேற்று வரை அதிக (465) ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற சிறப்பைப் பெற்றார். மற்றும் சங்கக்கார 54, தரங்க 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சவுத்தி மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியில் ஆட்டநாயகனாக டில்சான் தெரிவானார்.

இலங்கை அணியின் இவ்வெற்றி ஆசியாவின் கிரிக்கெட் வளர்ச்சியையும், அதன் ஆதிக்கத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது. அதாவது பத்தாவது உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை ஆசிய அணிகள் பெற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டாலும் அதை நேற்றே உறுதி செய்ய முடிந்தது. அத்துடன் இது ஆசிய ரசிகர்களைப் பொறுத்து மகிழ்ச்சி மிக்கதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.



## தினமுரசு இலங்கை எதிர் நியூசிலாந்து SCORE CARD

மைதானம் : கொழும்பு திகதி : 29-03-2011

ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி நியூசிலாந்து : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) எம். ஜே. குப்ரில் | b லசித் மலிங்க | 39 |
| 02) பிறன்டன் மக்கலம் | b ரங்கண ஹேரத் | 13 |
| 03) ஜே.டி. ரைடர் | c சங்கக்கார b முரளிதரன் | 19 |
| 04) ரெய்லர் | c தரங்க b மெண்டிஸ் | 36 |
| 05) ஸ்ரைரிஸ் | lbw b முரளிதரன் | 57 |
| 06) வில்லியம்ஸன் | lbw b லசித் மலிங்க | 22 |
| 07) நேதன் மக்கலம் | c சங்கக்கார b லசித் மலிங்க | 09 |
| 08) ஜேக்கப் ஓரம் | c மஹேல b டில்சான் | 07 |
| 09) விட்டோரி | not out | 03 |
| 10) ரிம் சவுத்தி | c சங்கக்கார b மெண்டிஸ் | 00 |
| 11) ஏ.ஜே. மக்கே | b மெண்டிஸ் | 00 |
| உதிரிகள் | (lb 5, w 6, nb1) | 12 |
| மொத்தம் | (all out : 48.5 ஓவர்கள்) | 217 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) தரங்க | c ரைடர் b சவுத்தி | 30 |
| 02) டில்சான் | c ரைடர் b சவுத்தி | 73 |
| 03) சங்கக்கார | c ஸ்ரைரிஸ் b மக்கே | 54 |
| 04) மஹேல ஜெயவர்த்தன | lbw b விட்டோரி | 01 |
| 05) சமர வீரா | not out | 23 |
| 06) சாமர சில்வா | b சவுத்தி | 13 |
| 07) மத்தியூஸ் | not out | 14 |
| 08) லசித் மலிங்க | | |
| 09) ரங்கண ஹேரத் | | |
| 10) மெண்டிஸ் | | |
| 11) எம். முரளிதரன் | | |
| உதிரிகள் | (b9, lb 6, w 6) | 12 |
| மொத்தம் | (5 w :47.5 ஓவர்கள்) | 220 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| லசித் மலிங்க | 09 | 55 | 03 |
| ரங்கண ஹேரத் | 09 | 31 | 01 |
| ஏ. மெண்டிஸ் | 9.5 | 35 | 03 |
| ரி. டில்சான் | 05 | 22 | 01 |
| எம். முரளிதரன் | 10 | 42 | 02 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| நேதன் மக்கலம் | 06 | 33 | 00 |
| ரிம் சவுத்தி | 10 | 57 | 03 |
| விட்டோரி | 10 | 36 | 01 |
| ஜேக்கப் ஓரம் | 08 | 29 | 00 |
| மக்கே | 9.5 | 37 | 01 |

5 விக்கெட்டுக்களால் இலங்கை அணி வெற்றி. ஆட்டநாயகன் : டில்சான்

அனுசரணையாளர்:
புதிய வினோ நகைமாடம்
அசல் 22 கரட் நிரம்பிய நவீன வண்ணம் கொண்ட தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து
நீங்கள் விரும்பும் தினத்தில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
இணை நிறுவனம்:
Mobile Plaza Phone Shop
மொபைல் போன்கள், உதிரிப்பாகங்கள் என்பனவற்றை மலிவாகவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடவேண்டி ஒரே இடம்
Mobile Plaza பிரதான வீதி, (HNB அருகில்) சங்கானை
புதிய வினோ நகைமாடம்
பிரதான வீதி, சங்கானை.
(செலான் வங்கிக்கு அருகாமை)
T.P: 0776002588, 021 567 2588

ICC Cricket World Cup 2011
(C/633)

# விமானத்தின் டயர் வெடிப்பு விமான நிலையத்தில் பரபரப்பு


விமானத்தின் டயர் திடீரென வெடித்ததால், அதில் பயணம் செய்யவிருந்த கர்நாடக அமைச்சர்கள் இருவர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

டில்லியில் நடக்கவுள்ள விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்ளவென அவர்கள் தலைநகர் டில்லிக்குச் செல்வதற்காக விமானத்தில் பயணம் செய்வதற்கு வந்திருந்தனர்.

கர்நாடக மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் ஜனார்த்தன ரெட்டி மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர் சிறீராமுலு ஆகியோர் ஆந்திர மாநிலம் ஐதராபாத் சர்வதேச விமான நிலையத்திலிருந்து தனியார் விமானம் மூலம் இந்தியத் தலைநகர் டில்லி செல்வதற்காக விமானத்தில் ஏறிய உடன் விமானம் புறப்படத் தயாராக இருந்த போது விமானத்தின் ஒரு டயர் திடீரென பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இதனால் விமான நிலையம் பரபரப்படைந்த நிலையில் காணப்பட்டது.




# விஜயகாந்துக்கு எதிராக லியோனி பிரசாரம்



(சென்னை)


நகைச்சுவை நடிகர் வடிவேலு தி.மு.க.விற்கு ஆதரவாகப் பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் தற்போது நகைச்சுவை நடிகரும் பட்டிமன்றப் பேச்சாளருமான திண்டுக்கல் லியோனி விஜயகாந்துக்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளார்.

பட்டிமன்றங்களில் தனது நகைச்சுவைப் பேச்சால் மக்களைக் கவர்ந்த திண்டுக்கல் ஐ.லியோனி, சில திரைப்படங்களில் நகைச்சுவை வேடம் ஏற்று நடித்துள்ளார்.

இவர் தி.மு.க தலைவர் கருணாநிதியை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பிற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தி.மு.க.வுக்கு ஆதர வாக தான் 15 நாள் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்தார்.

ஒரு நடிகர் நான்தான் அடுத்த முதல்வர் என்று கூறி வருகிறார். அவருக்கு எதிராக பிரச்சாரம் செய்வதுதான் என் குறிக்கோள். கலைஞர்தான் அடுத்த முதல்வர் என்று மக்களுக்கு புரியவைப்பேன் என்றும் தெரிவித்தார்.

# காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மன்மோகன் பிரசாரம் செய்கிறார்



(புதுடில்லி)

காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மன்மோகன் சிங் கேரளமாநிலத்தில் 5 தேர்தல் தொகுதிகளில் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முதலில் அவர் அசாம் மாநிலத்தில் ஒருநாள் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 126 தொகுதிகளைக் கொண்ட அசாமில் வருகிற 4 மற்றும் 11 ஆம் திகதிகளில் இரணடு கட்டங்களாகத் தேர்தல் நடக்கிறது.

பிரசாரம் நிறைவு பெறும் இறுதி நாளில் அசாம் செல்ல பிரதமர் மன்மோகன்சிங் திட்டமிட்டுள்ளார். கவுகாத்தியில் நடைபெற உள்ள பொதுக் கூட்டத்தில் அவர் பிரசாரம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு பிரதமரின் அசாம் பிரசார பயணம் இன்னமும் அறிவிககப்படாமலுள்ளது.

தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய 3 மாநிலங்களிலும் வருகிற 13 ஆம் திகதி ஒரேநாளில் தேர்தல் நடைபெறவுள்ளது. அசாமில் பிரசாரம் செய்த பிறகு பிரதமர் மன்மோகன்சிங் கேரளா வரவுள்ளார். அநேகமாக அடுத்த வார இறுதியில் அவர் கேரளா வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கேரளாவில் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து இரண்டு அல்லது மூன்று பொதுக் கூட்டங்களில் பிரதமர் மன்மோகன்சிங் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார் என்று தெரிகிறது. 294 சட்டசபைத் தொகுதிகளைக் கொண்ட மேற்கு வங்காளத்தில் 6 கட்டங்களாகத் தேர்தல் நடக்கிறது.

# வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப் பணம் மத்திய அரசுக்கு நீதிமன்றம் கண்டனம்

(சென்னை)

வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கப்பட்டுள்ள இந்தியர்களின் கறுப்புப் பணத்தை மீட்டு இந்தியாவுக்கு திரும்பக் கொணடு வர மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று மேன் நீதிமன்றில் பொது நல வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது மத்திய அரசு சட்டவாளர் 14 பக்க விசாரணை அறிக்கையை மன்றில் தாக்கல் செய்தார். அதனைப் படித்த பின்னர் நீதிபதிகள் மத்திய அரசுக்கு கடும் கண்டனம் தெரிவித்தனர்.

அவர்கள் கூறுகையில், புதிதாக எந்த விவரமும் அறிக்கையில் இல்லை. கறுப்புப் பணத்தால் நாட்டுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் பற்றி எந்தளவில் விசாரணை நடக்கிறது? கறுப்பு பணம் எங்கிருந்து வந்தது? எங்கிருந்து போனது? எப்படிப் போனது? என்ற மூலாதாரங்கள் பற்றி விசாரணை நடக்கிறதா? என்று கேள்வி எழுப்பினர்.

# தமிழக காங்கிரஸிற்கு புதிய தலைவர்?

தமிழக காங்கிரஸ் கட்சிக்கு புதிய தலைவரை நியமிக்க வேண்டும் என அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ஜி.ஏ.வடிவேலு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரியவருவதாவது -

இரண்டு முறைக்கு மேல் சட்டப் பேரவை உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு இந்த முறை தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட மாட்டாது என வந்த செய்திகளால் தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என பல தொண்டர்கள் நம்பினர்.

ஆனால் தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வீ.தங்கபாலு கட்சியில் பல்வேறு குழப்பங்களை உண்டாக்கி, கட்சித் தொண்டர்கள், பொதுமக்களிடம் வெறுப்பையும் அதிருப்தியையும் ஏற்படுத்திவிட்டார். தருமபுரி, தேனி, பெரம்பலூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் எந்தத் தொகுதியையும் கேட்டுப்பெறவில்லை. இதனால் அங்குள்ள தொண்டர்கள் சோர்வடைந்துள்ளனர்.

வேட்பாளர்கள் தேர்விலும் கே.வீ.தங்கபாலு ஏராளமான குழப்பங்களை உண்டாக்கியிருக்கிறார். அவருடைய மனைவியின் வேட்பு மனுவைக் கூட உரியமுறையில் விண்ணப்பிக்காததால் அது நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இது காங்கிரஸ் கட்சிக்கு பெரிய அவமானமாகும். எனவே கட்சித் தொண்டர்களுக்கு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தவும், அவர்கள் தேர்தல் பணிகளில் தீவிரமாக செயலாற்றவும் தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியை கே.வீ.தங்கபாலு ராஜினாமாச் செய்ய வேண்டும.

அவர் ராஜிநாமாச் செய்யாவிட்டால் காங்கிரஸ் தலைமை அவரை நீக்கிவிட்டு உடனடியாக புதிய தலைவரை நியமிக்க வேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## எனது கிட்னியை தருகிறேன் டிக்கெட் கொடுங்கள் போட்டியை காணும் ஆர்வத்தில் ரசிகரின் உருக்கம்

இந்தியா- பாகிஸ்தான் போட்டியை நேரில் பார்ப்பதற்கு பெருமளவு ரசிகர்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர் மிகவும் எதிர்பார்ப்புக்குள்ளான இந்தப் போட்டியின் அனுமதிச் சிட்டைகள் விற்பனை நிறைவடைந்துள்ள நிலையில் அனுமதிச் சிட்டைகள் கிடைக்காமல் பல ரசிகர்கள் மிகுந்த ஏக்கம் அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் எப்படியும் அனுமதிச் சிட்டைகள் கிடைத்து விடாதா என்ற ஏக்கத்தில் ரசிகர் ஒருவர் எனது கிட்னியை எடுத்துவிட்டு அனுமதிச் சீட்டை தாருங்கள் என்று உருகியுள்ளார். பஞ்சாப் கிரிக்கெட் சங்க அலுவலகத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# தேர்தல் வேட்புமனு பரிசீலனையில் 1,153 மனுக்கள் தள்ளுபடியாயின

ஏப்ரல் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழக சட்டப் பேரவைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் 1,153 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

வேட்பு மனுத் தாக்கல் கடந்த 19 ஆம் திகதி தொடங்கி 26 ஆம் திகதி முடிவடைந்தது. மொத்தமுள்ள 234 தொகுதிகளுக்கும் 4,280 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர். வேட்பு மனுக்களை சரி பார்க்கும் பணி நேற்று நடைபெற்றது. இதில் 1,153 வேட்பு மனுக்கள் உரிய ஆவணங்கள் இல்லாததாலும், மற்ற பிற காரணங்களாலும் தள்ளுபடி செய்யப்பட்டது.

தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலுவின் மனைவி ஜெயந்தி தங்கபாலுவின் வேடபு மனு நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து மயிலாப்பூர் தொகுதி மாற்று வேட்பாளரான தங்கபாலு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதேபோல, வேதாரண்யம் தொகுதி பா.ம.க. வேட்பாளர் சதாசிவன் மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனையடுத்து மாற்று வேட்பாளர் சின்னத்துரை வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது. நாளை வரை வேட்பு மனுக்களை திருமபப் பெற்றுக்கொள்ளலாம். இதையடுத்து இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .............................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# கொழும்பு - யாழ் தனியார் சேவைக்கு 78 பேருந்துகளுக்கு அனுமதி

(கொழும்பு)

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களுக்கிடையில் போக்குவரத்தில் ஈடுபடும் 78 தனியார் பேருந்து இயக்குநர்களுக்கு வீதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கேள்விப்பத்திரம் கோரப்பட்ட பின்னர் இந்த அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டதாகவும் அனுமதிப் பத்திரத்திற்கான குறைந்தபட்ச விலையாக 11 லட்சம் ரூபா குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு யாழ்ப்பாணத்திற்கிடையில் பெருமளவான பேருந்துகள் சேவையில் ஈடுபட்டுவந்தன. அவ்வழித்தடத்திற்கான பேருந்து அனுமதி தொடர்பாக அதிக சர்ச்சைகள், குற்றச்சாட்டுகளும் எழுந்தன. இந்த நிலையில் குறித்த பயணத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் வெளிப்படையானதாகவும் குற்றச்சாட்டுகளைத் தவிர்க்கும் வகையிலும் இருக்க வேண்டும் என அமைச்சர் விரும்பியதால் 78 தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# ஐ.தே.க உள்ளூராட்சி உறுப்பினர் சத்தியப்பிரமாண நிகழ்வு இன்று



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற பிரதானிகளது சத்தியப்பிரமாண நிகழ்வுகள் இன்று இடம் பெறவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சத்தியபிரமாண நிகழ்வு கட்சியின் தலைமையகமான சிறி கொத்தாவில் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இடம்பெறவுள்ளதாகவும் தொழிலாளர் தினத்தை பண்டாரவளை நகரில் நடத்துவதற்கு கட்சியின் செயற்குழு தீர்மானித்ததாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# ஜப்பானிய மக்களை முன்மாதிரியாகக் கொண்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்



(கொழும்பு)

நாட்டு மக்கள் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு பாரிய பொறுப்புக்களை வழங்கியுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பொலனறுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவசாய பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஜப்பானிய மக்களின் நிலைமைகளை அனுபவமாகக் கொண்டு நாட்டு மக்கள் செயற்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே குளங்கள், வனப்பிரதேசங்கள், நீரோடைகள் போன்ற இடங்களுக்கு அருகாமையில் வீடுகளை நிர்மாணிக்க எதிர்காலத்தில் அனுமதியளிக்கப் போவதில்லை எனவும், அதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தடுப்பதற்கே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கடனட்டை மோசடியில் ஈடுபட்ட 56பேர் அவுஸ்ரேலியாவில் கைது

(கொழும்பு)

கடன் அட்டை மோசடியில் ஈடுபட்ட 56பேர் அவுஸ்ரேலியா மெல்போர்ன் நகரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இலங்கையர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கும்பலானது பாரிய வலை அமைப்பு ஒன்றை அவுஸ்ரேலியாவில் உருவாக்க முனைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பிரித்தானியா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து அவுஸ்ரேலியா சென்றுள்ளதாகக் கூறப்படும் இவர்கள்,

அவுஸ்ரேலியாவில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வேலைபார்க்கும் இலங்கையர்களை அணுகி, பெரும் பணத்தைக் கொடுத்து அங்குள்ள கடனட்டை இயந்திரத்தில் தமது இலத்திரனியல் உபகரணங்களைப் பொருத்தியுள்ளனர். அதன் மூலம் வாடிக்கையாளர்களின் கடன் அட்டை இலக்கங்களை அவர்கள் பெற்றுக்கொண்டுள்ளனர். மறைத்துவைக்கப்படும் சிறிய கமராக்கள் மூலமாக வாடிக்கையாளர் கடன் அட்டையின் இரகசியக் குறியீட்டு எண்களையும் இவர்கள் பெற்று, பின்னர் அதேபோல போலியான கடன் அட்டைகளைத் தயாரித்து, சுமார் 25.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவர்கள் சம்பாதித்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் நிரப்பும் இடங்களில் வேலைசெய்யும் சில இலங்கையருக்கு அவர்கள் பெருந்தொகைப்பணத்தைக் கொடுத்துள்ளதாகவும், பிடிபட்ட கும்பலிடம் சுமார் 63,000 கள்ளக் கடனட்டைகள் இருந்ததாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# சில இணையத் தளங்களை சிறுவர்கள் பார்வையிடாதிருக்க நடவடிக்கை

(கொழும்பு)

தடை செய்யப்பட்ட இணையத் தளங்களை சிறுவர்கள் பார்வையிடுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, தீர்மானித்துள்ளது.

இதன்பிரகாரம் தொலைத்தொடர்பு இணையத்தள சேவை வழங்குநர்களினூடாக பெற்றோரை அறிவுறுத்த விருப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட விடுத்துள்ள ஊடக அறிக்கையில், ஓர் இணையத் தளத்தை சிறார்கள் பார்வையிடுவதைத் தடுப்பது வினைத்திறனானதாக மாட்டாது. ஏனெனில், சிறார்கள் தடைசெய்யப்பட்ட அந்த இணையத்தளத்தை பார்வையிடுவதற்கு வேறு வழிகளை கண்டறியக்கூடும். சமூக வலைத்தளங்களை சிறார்கள் பார்வையிடுவதைத் தடுப்பதில் நாம் செய்யக்கூடிது அதிகமில்லை. எனவே,தமது பிள்ளைகள் விரும்பத்தகாத இணையத்தளங்களைப் பார்வையிடுவதைப் பொருத்தமான கணினி மென்பொருட்களைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்துமாறு பெற்றோர்களிடம் இணைய சேவை வழங்குநர்கள் மூலம் கோரிக்கை விடவுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# விபத்தில் கணவர் பலியானதை அறிந்து கடற்படை பெண் சிப்பாய் தற்கொலை

(கொழும்பு)

விபத்தில் தனது கணவர் பலியானதை அறிந்து மிகவும் வேதனையடைந்த கடற்படையின் பெண் சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது கிளிநொச்சி இரணைமடுப்பகுதியில் கடமையாற்றி வரும் தனது மனைவியைப் பார்ப்பதற்கு நண்பர் ஒருவருடன் கிளிநொச்சிக்கு வந்த கணவன் மதவாச்சிப் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் பலியாகியுள்ளார். அதனை அறிந்த மனைவி தனது கணவர் பலியான கவலையில் தற்கொலை செய்துள்ளார். இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் நிலுகா தமயந்தி என அடையாளம் காணப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு ஒலுவில் பிரதேசத்தில் நீதிமன்றம் நிர்மாணிக்க நடவடிக்கை



(கொழும்பு)

ஒலுவில் பிரதேசத்தில் சகல வசதிகளையும் கொண்ட நீதிமன்றம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். நிந்தவூர் பிரதேசத்தையும் அட்டாளைச்சேனை பிரதேசத்தையும் உள்ளடக்கிய ஒலுவில் துறைமுகத்தை அண்டிய பிரதேசத்தில் இந்த நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத்துடன் அந்தப் பிரதேசத்தில் புதிய பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒலுவில் துறைமுகத்தை அண்மித்துள்ள இரண்டு ஏக்கர் நிலப் பரப்பு இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் பொலிஸ் நிலைய நடவடிக்கைகளுக்கும் மிக நீண்ட தூரம் பிரயாணம் செய்து பல்வேறு அசௌகரியங்களை மக்கள் எதிர் கொண்டு வருவதனைக் கருத்தில் கொண்டு, ஒலுவிலில் புதிய நீதிமன்றமும், புதிய பொலிஸ் நிலையமும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் ஒலுவில், பாலமுனை, நிந்தவூர் அட்டாளைச்சேனை, உதுமாபுரம், அஸ்ரப் நகர், திராய்க்கேணி, சின்னப் பாலமுனை ஆகிய கிராம மக்கள் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# மரக்கறிகளுக்கு நிலையான விலை அவசியம்



(கொழும்பு)

மரக்கறிகளின் விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதற்கு பொருளாதார மத்தியநிலையங்களில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொது மக்களுக்கு நியாய விலையில் மரக்கறிகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலே பொருளாதார மத்திய நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டதாகவும், மரக்கறிகளின் விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதற்கு பொருளாதார மத்தியநிலையங்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதனிடையே மக்களின் போசாக்கினை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்க விஷேட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

# இணையம் ஊடாக போலி அனுமதிச் சிட்டைகள்

(கொழும்பு)

இவ்வருட உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான போலி அனுமதிச் சிட்டைகள் சில இணையத்தளங்கள் ஊடாக விற்பளை செய்யப்பட்டுவருவதாகவும், அது தொடர்பாக இணையத்தள பாவனையாளர்களை அவதானத்துடன் செயற்படுமாறும் இலங்கை இணைய பாதுகாப்புக்கான தேசிய நிலையம் (SLCERT) எச்சரித்துள்ளது.

இவ்வாறான இணையத் தளங்கள் தொடர்பாக ஏற்கெனவே இரு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இணைய பாதுகாப்புக்கான தேசிய நிலையத்தின் சிரேஷ்ட தகவல் பொறியியலாளர் ரோஹண பள்ளியகுரு தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து இந்த இணையத்தளங்கள் செயற்படுத்தப்படுவதாகவும் இணையத்தள பாவனையாளர்கள் தமது கடன்அட்டை இலக்கம் உட்பட தனிப்பட்ட விபரங்களை இத்தகைய இணையத்தளங்களுக்கு வழங்குவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் கோரியுள்ளார்.

# மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தி சகல செயற்பாடுகளும் அமையவேண்டும்

## ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வீட்டுத்திட்டங்கள் உள்ளிட்ட தேவைகளுக்காக மக்களுக்கு அதிகளவான மணலுக்கு தேவை இருப்பதனால் மணல் விநியோகிக்கின்ற போது நிர்ணயம் செய்கின்ற விலை அவர்களுக்குச் சுமையாக மாறி விடக்கூடாது என ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின், பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.


கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உழவு இயந்திர உரிமையாளர்கள் மற்றும் கிராம அபிவிருத்திச்சங்க பிரதிதிநிதிகளுடன் இடம்பெற்ற மணல் விநியோகத் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டுள்ள மக்கள், பாதிக்கப்பட்டுள்ள பிரதேசம் என்ற வகையில் மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தியதாக எந்தச் செயற்பாடுகளும் அமையவேண்டும். அவர்கள் தங்கள் கிராமமக்களுக்கு நியாயமான முறையில் குறைவான விலையில் மணல் விநியோகம் செய்கின்ற கிராம அபிவிருத்திச் சங்கங்களான கண்டாவளை, கல்மடுநகர், கல்லாறு போன்ற கிராம அபிவிருத்திச் சங்கங்களைப் பாராட்டியதோடு இச் சங்கங்களை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனைய கிராம அபிவிருத்திச் சங்கங்களும் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.மேலும் விரைவில் உழவு இயந்திர உரிமையாளர்கள் மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் அதிகாரிகள் ஆகியோர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துகள் பெறப்பட்டு மக்களுக்கு மணல் விநியோகத்திற்கு நியாயமான நிரந்தர விலை நிர்ணயிக்கப்படும் அதேவேளை நடைமுறைகளும் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் சிறீனிவாசன், கரைச்சி கண்டாவளை பளை பிரதேச செயலர்களான சத்தியசீலன், முகுந்தன் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி லக்ஸ்மன் பண்டார, பிரதேச சபை செயலாளர்கள் ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# முள்ளிக்குளம் மக்களுக்கு காணிகள் அன்பளிப்பு

(மன்னார்)



யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மன்னார் முள்ளிக்குளம் பகுதிகளில் உள்ள மக்களுக்கு மன்னார் மாவட்ட ஆயரான ராயப்பு ஜோசப் ஆண்டகை காணிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

மன்னர் முள்ளிக்குளம் பகுதி பாதுகாப்பு வலயமாக உள்ள நிலையில் இந்தப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்களுக்கு இவ்வாறு காணிகள் வழங்கப்பட்டுள்ளது.

முள்ளிக்குளம் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த 52 குடும்பங்கள் ஆயரிடம் தமது பிரச்சினைகளைச் சமர்ப்பித்ததன் காரணமாக தனக்குச் சொந்தமாக மன்னார் மேற்கு தரவன்கோட்டையில் இருந்த நிலத்தை அவர்களுக்குப் பங்கிட்டு வழங்கியுள்ளார்.

# ஏற்றுமதியாளர்களுக்கு அரசினால் ஊக்குவிப்பு கொடுப்பனவு



(கொழும்பு)

ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்குமுகமாக அரசாங்கம் 1600 மில்லியன் ரூபாவை வழங்கி உள்ளதுடன இறுதிக்கட்டக் கொடுப்பனவாக 493 மில்லின் ரூபாவை வழங்கியுள்ளதாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

உலக பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சளைக்காமல் செயல்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கே இந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக இந்த விசேட கொடுப்பனவு வழங்கும் திட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி உள்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்கனவே 1107 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் இறுதிக் கட்டமாக 76 ஏற்றுமதியாளர்களுக்கு 493 மில்லியன் ரூபாவை வழங்கும் நடவடிக்கை அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

அரசாங்கம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்ட பின்னணியின் கீழ் நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை முறையாகப் பேணிவருவதற்கு இந்த ஏற்றுமதியாளர்கள் தமது முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டமை காரணமாக அமைந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஈ.பி.டி.பி.யினரால் நெடுந்தீவில் விசேட சிரமதான பணி

(கொழும்பு)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தலைமையில் நெடுந்தீவு கிழக்கு ஐங்கரன் சனசமூக நிலையத்திற்கருகில் நீண்ட காலமாக துப்பரவு செய்யப்படாமல் இருந்த கிணறு கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களால் கடந்த 27.03.2011 அன்று சிரமதானப் பணி முலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

அப்பகுதி மக்கள் தமது குடிநீர் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்காக பயன்படுத்தும் கிணறு நீண்ட காலமாக கவனிப்பாரற்று அசுத்த மடைந்திருந்தது. இதனைக் கவனித்திலெடுத்த நெடுந்தீவு பிரதேச அமைப்பாளர் றெக்சியன் (ரஜீவ்) இதனைத் துப்புரவு செய்யும் முகமாக யாழ் மாவட்ட கட்சியின் தலைமையகத்திற்குத் தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாக ஈ.பி.டி.பி.யின். யாழ். பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் நெடுந்தீவுப் பிரதேசத்திற்கு சென்று துப்புரவுப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

மக்களின் நாளாந்த விடயங்களில் கூடுதல் கவனம் எடுத்து தினமும் மக்களுடன் நின்று மக்கள் நலப்பணிகளை மேற்கொள்ளும் ஈ.பி.டி.பியினரின் பணிகள் மேலும் சிறக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் மனமுவந்து பாராட்டியதுடன் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

அந்த மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பி. யாழ் மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் இது மட்டுமல்லாது இவ்வாறான மக்கள் நலன்சார்ந்த பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அதற்கு மக்கள் தொடர்ந்தும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# பாடசாலைகளில் உடற்சுகப் பயிற்சி

(கொழும்பு)

சகல பாடசாலை மாணவர்களினதும் தேகப் பயிற்சியை மேம்படுத்தி உடற்சுகப் பயிற்சியை முறையாக நடைமுறைப்படுத்தும் திட்டமொன்றை எதிர் வரும் மே மாதத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது ஆரம்ப வகுப்புகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற செயற்பட்டு மகிழ்வோம் எனும் உடற்செயற்பாட்டுத் திட்டத்தைப் போன்று இடைநிலை வகுப்புகளிலும் உடற்சுகப் பயிற்சியை ஒழுங்காக மேற்கொண்டு சகல மாணவர்களும் ஏதாவதொரு உடற்பயிற்சியில் பங்குபற்றக் கூடிய திட்டத்தை ஒழுங்கு செய்துள்ளதுடன் அதனை மூன்று மாதத்திற்கொருமுறை மதிப்பீடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பாடசாலை மட்ட விளையாட்டுகளை அபிவிருத்தி செய்வதற்கான உடற்பயிற்சியைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சகல பாடசாலைகளிலும் வாரத்தில் 3 நாட்கள் உடற்பயிற்சியைக் கட்டாயமாகச் செய்வதற்கு காலையில் 15 நிமிடங்கள் ஒதுக்கி சகல பாடசாலைகளிலும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கல்வி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# எரிபொருள் இடைநிறுத்தம் பல மில்லியன் இழப்பீடு

(கொழும்பு)

கெரவலப்பிடிய மின் நிலையத்திற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சலுகை விலையில் வழங்கப்பட்டு வந்த எரிபொருள் அடை நிறுத்தப்பட்டுள்ளதால் 100 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது

4.5 மில்லியன் ரூபா வரை எரிபொருள்பெற திறைசேரியும் அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது.மேற்படி மின் நிலையம்பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 2300 மில்லியன்கள் மட்டுமே செலுத்தவேண்டிய நிலையில், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் வழங்குவதை நிறுத்தியுள்ளதாக மின்சக்தி அமைச்சுக் கூறியது.

இதனால் கடந்த 10 நாட்களாக கெரவலப்பிட்டிய மின்நிலைய உற்பத்தி தடைப்பட்டுள்ளதோடு, தனியார். துறையிடமிருந்து கூடுதல் விலைக்கு மின்சாரம் கொள்வனவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சுக் கூறியுள்ளது.



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தலைமையில் நெடுந்தீவு கிழக்கு ஐங்கரன் சனசமூக நிலையத்திற்கருகில் நீண்ட காலமாக துப்புரவு செய்யப்படாமல் இருந்த கிணறு, கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களால் கடந்த 27.03.2011 அன்று சிரமதானப் பணி முலம் துப்புரவு செய்யப்பட்டது.துப்புரவுப் பணிகளில் கட்சியின் உறுப்பினர்கள் ஈடுபடுவதையும்,பிரதேச மக்களுடன் மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# குற்றச்சாட்டுக்கள் இன்றி கைதிகளா? அவர்களை விடுதலை செய்ய அரசு தயார்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



(கொழும்பு)

புலிகள் இயக்கச் சந்தேக நபர்கள் எதுவித குற்றச்சாட்டும் இன்றி நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து தனக்கு எதுவும் தெரியாது என தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க சிரேஸ்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விபரங்களைத் தந்தால், அரசாங்கம் அவர்களை விடுவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பூஸா தடுப்பு முகாமில் அவ்வாறு குற்றச்சாட்டுகள் எதுவுமின்றி எவரும் தடுத்து வைக்கப்பட்டிருப்பார்களாயின் அவர்கள் பற்றிய விபரத்தைச் சமர்ப்பிததால் பொலிஸாருடன் கலந்துரையாடி அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென வாசுதேவ நாணயக்கார உறுதியளித்துள்ளார்.

அலரி மாளிகையில் சர்வதேச ஊடகவியலாளர்களைச் ஜனாதிபதி நேற்று முன்தினம் சந்தித்த போது சிரேஷ்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் உடனிருந்தார்.

இந்தச் சந்திப்பு நிறைவடைந்த பின்னர் பி.பி.சி செய்திச் சேவைக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன பி.பி.சி.க்கு இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், தம்மிடம் அவ்வாறு குற்றச்சாட்டு எதவுமின்றி தடுத்து வைக்கப்பட்டவர்களின் பட்டியல் உண்டென்றும் தேவையானால் அதனைப் பார்வையிடலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தந்த தகவல்களின் அடிப்படையிலேயே அப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் விக்ரமபாகு கருணாரட்ன கூறியுள்ளார்

# குடிசன மதிப்பீட்டுக்கான கணக்கெடுப்புகள் ஆரம்பம்

(கொழும்பு)

இந்தவருடம் மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பீட்டுக்கான் கணக்கெடுப்புக்களைப் பட்டியலிடும் நடவடிக்கைகள் இந்த வாரம் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான தகவல்கள் குடிசன மதிப்பீடு மற்றும் கணக்கெடுப்புத் திணைக்களப் பணிப்பாளர் ஏச்.ஆர்.குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராம அலுவலர் ஊடாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. வரைபடம் தயாரிக்கும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. குடியிருப்புக்களைக் கணக்கெடுக்கும் போது கட்டடங்களுக்கான இலக்கங்கள் வழங்கப்பட்டு அவற்றை ஆவணங்களில் பதிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கிராம அலுவலர்கள் அடுத்த மாதம் முதல் தமது கணக்கெடுப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

# 49 சி.சி செலுத்துபவர்களும் ஹெல்மெட் அணிய வேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் பாவனையிலுள்ள 49சி.சி மோட்டார் சைக்கிள்கள் உட்பட சகல வகையான மொபெட் மோட்டார் சைக்கிள்களும் மோட்டார் திணைக்களத்தின் விதிகளின்படியே செலுத்தப்பட வேண்டுமென மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி சகல மோட்டார் சைக்கிள்களும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுவதுடன், எதிர் வரும் முதலாம் திகதியிலிருந்து சகல மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துபவர்களும், பின் இருக்கையில் இருப்பவர்களும் ஹெல்மெட் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# தாதியர்மன்ற அங்கத்தவர்களாக பொருத்தமற்றவர்கள் நியமனம்

## அரசு மீது குற்றம் சுமத்துகின்றது தொழிற்சங்கம்

(கொழும்பு)

1984 தொழிற்சங்க சட்ட ஏற்பாட்டின்படி அமைக்கப்பட்ட தாதியர் மன்றத்தின் அங்கத்தவர்களாக தகுதியில்லாதவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தாதியர்கள் தொழிற்சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

19 அங்கத்தவர்கள் கொண்ட தாதியர் மன்றத்திற்கு பொருத்தமில்லாதவர்கள் நியமிக்கப்படுவார்களாயின் இப்போதுள்ள நிலைமையே தொடர்ந்தும் காணப்படும் என அரசாங்க தாதியர் உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

தாதியர் மன்றத்தில் உத்தியோக பற்ரற்ற 8 உறுப்பினர்கள் இருப்பர். ஏனைய 11 பேரும் தாதிய சமூகத்திலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

இந்த மன்றம் தாதிய தொழில் புரிவதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும். தாதிய சமூகத்தின் ஒழுக்காற்று நடவடிக்கையிலும் இதற்கு அதிகாரம் உண்டு என அரசாங்க தாதியர் தொழிற்சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

அரசாங்கம் தெரிவு செய்யும் தாதியர்களிலிருந்து 11 பேரை தாதியர்கள் தெரிவு செய்வர். இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்கள் தாதியத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா தகைமையைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், அரசாங்கம் நியமித்த சிலருக்கு இந்தத் தகுதி இல்லை. தகுதியுள்ள பலரை அரசாங்கம் உதாசீனப்படுத்தியுள்ளதென சமன் ரத்னபிரிய கூறினார்

# முதலாம் தவணை விடுமுறை ஏப்ரல் எட்டு என அறிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்திற்கான முதல் தவணைக்கான பாடசாலை விடுமுறைத் தினங்களை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி சகல அரச பாடசாலைகளும் மூடப்படும். ஏப்ரல் 25ஆம் திகதி மீண்டும் தமது இரண்டாவது தவணைக்காகத் திறக்கப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் சகல கல்வித்திணைக்களம் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# மிதிபலகைப் பயணத்திற்கு முற்றாகத் தடை விதிப்பு

அரச மற்றும் தனியார் பேருந்துகளில் மதிபலகையில் பயணம் செய்வதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

மிதி பலகையில் பயணம் செய்வதற்கு இடமளிக்கும் இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

காலையிலும் மாலை நேரத்திலும் பஸ் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போதே பயணிகள் மிதி பலகைகளில் அதிகமாக நின்று கொண்டு செல்கிறார்கள். இதனால் நாளாந்தம் ஏற்படும் வீதி விபத்துக்களில் பலர் மரணிக்கிறார்கள்.

இனிமேல் பஸ் சாரதிகளுக்கும் நடத்துனர்களுக்கும் சட்டப்படி நடவடிக்கைகள் எடுப்பதுடன் மிதிபலகையில் பயணிப்பவர்களையும் பொலிஸார் தண்டிக்கவுள்ளார்கள். முதல் கட்டமாக மிதிபலகையில் பயணிப்பவர்களை பஸ்ஸை நிறுத்தி இறக்கிவிட்டு அவர்களை கடுமையாகப் பொலிஸார் எச்சரிப்பார்கள். அவர்கள் தொடர்ந்தும் இதே தவறை செய்தால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுப்பார்கள் என மேலும் தெரிவித்தார்.

### கட்சியைப் பிளவுபடுத்த.....

காலங்களில் பொது இணக்கப் பாட்டின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட வேண்டும். தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட எந்தப் பதவியாக இருந்தாலும் அந்த நிபந்தனை பொருந்தும்.

அதனை மீறி பொது இணக்கப்பாட்டை ஏற்றுக் கொள்ளாமல் யாராவது வாக்கெடுப்பின் மூலம் பதவிகளைக் கைப்பற்ற முயன்றால் அது பொது இணக்கப்பாட்டுக்கு சவால் விடும் செயலாகவே கருதப்படும்.

அத்துடன் அவ்வாறான செயல்கள் மீண்டும் கட்சியைப் பிளவுபடுத்தவே இடமளிக்கும். அவ்வாறானவர்களை பொது மக்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்களின் சாபம் சும்மா விடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்


### விரைவில் புதிய.......

காலத்தில் யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளியேறியோர் அனைவரும் இந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இதன்காரணமாக யாழ்.மாவட்டத்தின் தற்போதைய வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 860,000 இல் இருந்து சுமார் 500,000 ஆக வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது ஒரு அண்ணளவான எண்ணிக்கை மட்டுமே. சரியான புள்ளிவிபரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்

# சரத் பொன்சேகாவின் வழக்கு மே மாதம் வரை ஒத்திவைப்பு




(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் சுகவீனம் காரணமாக அவருக்கெதிரான ஹைகோர்ப் மோசடி தொடர்பான வழக்கு மே மாதம் வரை பிற்போடப்பட்டுள்ளது.

நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றில் ஹைகோர்ப் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சரத் பொன்சேகா சுகவீனமுற்றிருப்பதால் அவரை ஆஜர் செய்ய முடியவில்லை என்று தெரிவித்த சிறைச்சாலை அதிகாரிகள், சிறைச்சாலை மருத்துவரின் சான்றிதழையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

சிறைச்சாலை வைத்திய அதிகாரியின் மருத்துவ சான்றிதழை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் ஹைகோர்ப் மோசடி தொடர்பான் வழக்கை மே மாதம் 04ஆம் திகதி வரை பின்தள்ளி வைத்தது. அத்துடன் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரத்தினவை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு அறிவுறுத்தியது.

ஹைகோர்ப் மோசடி வழக்கில் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரத்தினவும் குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ள நிலையில், அவர் தலைமறைவாகி விட்டார். அவரைக் கைது செய்ய தற்போது சர்வதேச பொலிஸான இன்டர்போலின் ஊடாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




### புடவைக் கடைத்....

இக்கடைத் தொகுதியில் உள்ள ஒரு கடையில் ஏற்பட்ட தீ மற்றைய கடைகளுக்கும் பரவியதால் அப்பகுதியில் உள்ள சில கடைகள் முற்றாக எரிந்து சாம்பலாகியதுடன், சில கடைகள் பகுதியளவில் எரிந்துள்ளன. இக்கடையில் காணப்பட்ட லட்ச ரூபா பெறுமதியான உடு புடவைகள் எரிந்து நாசமாகின. தீ பற்றியமைக்கான காரணம் உடனடியாக அறியப்படவில்லை.

தீ பற்றிய இடத்திற்கு இராணுவத்தினரும், பொலிஸாரும், பொதுமக்களும் உடனடியாக விரைந்ததன் பயனாக, தீ 30 நிமிடத்தினுள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இதனால், மீதிக்கடைகளுக்கு தீ பரவாமல் தடுக்கப்பட்டதும், பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும் பாதுகாக்கப்பட்டன.

இராணுவத்தினரும், பொலிஸாரும், பொதுமக்களுடன் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமையை பல்வேறு தரப்பினரும் பாராட்டியுள்ளனர். (மி)

...ந்துறைப் படிப்பகம்
...நகர சபை, யாழ்ப்பாணம்.



# மீள்குடியமர்வு முல்லையில் மும்முரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் நேற்று தெரிவித்துள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குமுழமுனை மத்தி மற்றும் குமுழமுனை கிழக்கு கிராமசேவையாளர் பிரிவுகளிலும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மணவாளன் பட்டமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவிலும் மக்கள் மீள்குடியேற்றப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ள மக்கள் மீள்குடியேற்றத்துக்காக சொந்த இடத்துக்குச் செல்ல விரும்பும் இடம்பெயர்ந்துள்ள குமுழமுனை மத்தி, குமுழமுனை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினுள் இயங்கும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திலும் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

மணவாளன் பட்டமுறிப்பு கிராமசேவையாளர் பிரிவில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.பத்திநாதன் அறிவித்துள்ளார்.

# சிலாபத்தில் பஸ் விபத்து; ஒருவர் பலி, பலர் காயம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ் வண்டியொன்று நேற்று சிலாபம் பிரதேசத்தில் வைத்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை வேளையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பஸ் வண்டி சிலாபம் பிரதேசத்தில் லுணுஓயா பாலத்தைக் கடக்கும் வேளையில் அதன் மோதி மீது விபத்துக்குள்ளாகியுள்ளது.

பஸ்வண்டி விபத்தின் காரணமாக அதில் பயணித்த நபரொருவர் உயிரிழந்து மேலும் ஐந்து பயணிகள் காயமுற்றுள்ளனர்.

இறந்தவர் பஸ்ஸின் துணைசாரதியாக கடமையாற்றுபவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

மிதிபலகையில் பயணித்துக் கொண்டிருந்த அவர் விபத்தின் போது லுணுஓயா ஆற்றுக்குள் விழுந்து உயிரிழந்துள்ளார். அத்துடன் காயமடைந்தவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் சிலாபம் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் மூலம் தகவல்கள் கிடைத்துள்ளன.

# குட்டித் தீவுகள் பத்து குத்தகைக்கு விடப்படவுள்ளன

## எதிர்ப்பையும் மீறி அரசு நடவடிக்கை

(கொழும்பு)

கற்பிட்டி கடற்பிரதேசத்தில் இருக்கும் மேலும் 10 தீவுகளை வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு விடுவதற்கான ஏற்பாடுகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேற்கொண்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்றம் மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் இன்றி இதற்கு முன்னர் 3 தீவுகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேலும் 10 தீவுகளை நீண்ட கால குத்தகைக்கு விடுவதற்கான ஏற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்தத் தீவுகள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 30 ஆண்டு காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உயர்கல்வி அமைச்சர் திஸாநாயக்க என்னைப் புறக்கணித்து செயற்படுகிறார்

## பிரதியமைச்சர் நந்திமித்ர கவலை

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சின் செயற்பாடுகள் குறித்து தனக்கு எதுவும் தெரிவிக்கப்படாமல், தான் புறக்கணிக்கப்படுவதாக பிரதியமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க கவலையடைந்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சராக எஸ்.பி. திசாநாயக்கவும், அவருக்கான பிரதியமைச்சராக நந்திமித்ர ஏக்கநாயக்கவும் செயற்படுகின்றனர். ஆயினும் அமைச்சின் எந்தவொரு செயற்பாடுகளிலும் தன்னை முன்னிலைப்படுத்துவது கிடையாது என்று பிரதியமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க வேதனைப்பட்டுள்ளார்.

அமைச்சின் தீர்மானங்கள் செய்ற்பாடுகள் குறித்து எந்தவொரு அறிவுறுத்தலோ, தகவலோ தனக்குத் தெரியப்படுத்துவதில்லை என்று குறிப்பிடும் அவர், தனக்கு எந்தவொரு பொறுப்பும் அளிக்கப்படாமல் மூலையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும் குறைப்பட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சரின் செயல்பாடுகள் காரணமாக அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கூட தன்னை அலட்சியப்படுத்தத் தொடங்கியிருப்பதாகவும் அவர் வேதனைப்பட்டுள்ளார்

# ஸ்ரீ சத்ய சாய்பாபா மருத்துவமனையில்; முன்னேற்றமடைகிறது உடல்நிலை



(கொழும்பு)

உலகப் புகழ்பெற்ற ஆன்மீக தலைவரான ஸ்ரீ சத்ய சாய்பாபா உடல் நலக்குறைவு காரணமாக கடந்த திங்கட்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த நவம்பர் மாதம் 86 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய ஸ்ரீ சத்ய சாய்பாபா சுவாசக் கோளாறுகளால் பாதிக்கப்பட்ட நிலையில் புட்டபர்த்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர் நிமோனியாவினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நுரையீரலுக்குள் நண்ணீர் சென்றுள்ளதாகவும் ஸ்ரீ சத்ய சாய் அறக்கட்டளையை சேர்ந்த ஜே.ரட்னாகர் ரெட்டி கூறினார்.

எனினும் அவர் உடல்நிலை தேறிவருவதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஏ.என். சபாயா தெரிவித்துள்ளார்.

## கட்சிதாவ...

விக்கிரமசிங்கவுக்கு கடைசி வரை உறுதியாக ஆதரவளித்தவன் என்ற வகையில் தனக்கும் பிரதித் தலைவர் பதவியொன்றை உருவாக்கித் தருமாறு அவர் விடுத்த வேண்டுகோள் கட்சியின் தலைவர் மற்றும் முக்கியஸ்தர்களால் அலட்சியம் செய்யப்பட்டுள்ளது.

அதன் காரணமாக அவர் தற்போது ஆளுங்கட்சியில் இணைந்து அமைச்சர் பதவியொன்றைப் பெற்றுக் கொள்வதில் அவர் தீவிர நாட்டம் கொண்டிருப்பதாக அறியக் கிடைத்துள்ளது.

பெரும்பாலும் எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டை அண்மித்ததாக நடைபெறும் அமைச்சரவை மாற்றத்திற்கு இரண்டொரு நாள் முன்னதாக அவர் ஆளுங்கட்சியில் இணைந்து கொள்ளும் சாத்தியம் இருப்பதாகவும் பிரஸ்தாப தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு அவர் ஆளுங்கட்சியில் இணைந்து கொள்ளும் பட்சத்தில் அவருக்கு வர்த்தக அல்லது சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படலாம் என்று தெரிய வருகின்றது.

# துண்டங்களாக வெட்டப்பட்ட மனிதச் சடலம் மீட்பு

## கேகாலையில் பரபரப்பு

(கொழும்பு)

கேகாலை - உதுவன்கந்த பிரதேசத்தில் பையொன்றில் வெட்டித் துண்டாக்கப்பட்ட நிலையில் உள்ள உடம்பின் கீழ் பகுதியும் மற்றும் இரு கால்களும் நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கேகாலை பொலிஸார் தெரிவித்தனர்.

பையினுள் உடம்பின் மேல்பகுதி காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும் அதேவேளை, நீதிவானால் விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது

## பகிடிவதை புரிந்த....

வர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட மாணவர்கள் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாட்டினைத் தெரிவித்ததையடுத்து 15 சிரேஷ்ட ஆசிரிய மாணவர்களையும் கைது செய்த கோப்பாய் பொலிஸார், யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி அ.ஆனந்தராசா இவர்களை ஒருநாள் தடுப்புக்காவலில் வைக்குமாறும், ஒருவர் ஐம்பதா யிரம் ரூபா ஆள் பிணையில் செல்லலாம் எனவும் வழக்கு தொடர்ந்து நடைபெறும் எனவும் உத்தரவிட்டார்.

## கிராமங்கள் தோறும்...

கூடங்களுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் புல்லினால் ஆக்கப்படும் பல்வேறு ஆக்கப் பொருட்களையும் மட்பாண்ட தொழிற்பயிற்சி கூடத்திற்குச் சென்று களிமண்ணினால் உருவாக்கப்படும் பல்வேறு ஆக்கப் பொருட்களையும் தும்புசார் தொழிற்பயிற்சி கூடத்திற்கு சென்ற அமைச்சர் அவர்கள் அங்கு ஆக்கப்படும் பல்வேறு ஆக்கப் பொருட்களையும் பார்வையிட்டார்.

மேற்குறிப்பிட்ட தொழிற்பயிற்சிக் கூடங்களுக்குச் சென்ற அமைச்சர் அவர்கள் துறைசார்ந்த அதிகாரிகளுடனும், போதனாசிரியர்களுடனும், பயிற்சியாளர்களுடனும் கலந்துரையாடி அவர்களது தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாகவும் கேட்டறிந்துகொண்டார்.

அங்கு பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் மூலமாக கிராமங்கள் தோறும் குறிப்பிட்ட தொழிற்துறைகளை விருத்தி செய்வதுடன், சுயதொழில் வேலை வாய்ப்புத் திட்டத்தையும் மேற்கொள்வதே பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் நோக்கமாகும்.

இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, ஆலோசகர் திருமதி வி.ஜெகராச சிங்கம், யாழ் மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உள்ளிட்டோருடன் துறைசார்ந்த முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

திருமறைக் கலாமன்றம்
கலைத்தூது
அழகியற் கல்லூரி
Basic German Course
For Beginners
ஜேர்மன் மொழி ஆரம்ப
நிலை வகுப்புக்கள்
ஆரம்பம்:- 23.04.2011
தொடர்புகளுக்கு:
திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
T.P 021 222 2393 (52)

## தொழில்பாதிப்பு...

மீனவர்களின் அத்துமீறி மீன் பிடிக்கும் நடவடிக்கையால் தமது தொழில் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்திய மீனவர்களின் இவ்வாறான அடாவடித்தனம் தினமும் கடலில் ஏற்படுவதால் தமது தொழில் வளத்தை இழந்துள்ளதாகவும், வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நடவடிக்கையினால், அன்றாட உணவிற்குக் கூடப் பெரும் பஞ்சம் நிலவுவதாகவும் இதனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் நிவாரணம் வழங்க வேண்டும் என அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

## கடல் வளங்களைப் பகிர்ந்து...

தொழில்சார் பிரச்சினைகளை ஆராய்வதற்காக இரு நாடுகளினதும் விசேட தூதுக்குழுக்கள் புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. நேற்று முன்தினம் ஆரம்பமாகிய இந்த உயர்மட்டப் பேர்ச்சுவார்த்தை நேற்றும் இடம்பெற்றதாக அங்கிருந்து எமக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு நாடுகளினதும் கடற்தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக சீரான வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் வகையில் கடல் வளத்தின் ஸ்திரத்தன்மையை தொடர்ந்து பேணும் வகையில் மீனவர்கள் தமது மீன்பிடி நடவடிக்கையை ஒழுங்குபடுத்திக் கொள்வது என்றும் இரு நாட்டுத் தூதுக்குழுக்களும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன. இதற்காக கடற்பரப்பில் எந்தப் பகுதிகளில் எந்த எந்தக் காலப் பகுதிகளில் கடற்தொழிலில் ஈடுபடுவது என்றும், எக்காலப் பகுதியில் தொழில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்வது என்பது குறித்தும் இரு தரப்பும் விரிவாக ஆராய்ந்துள்ளன. இதன் அடிப்படையில் கடற்தொழிலுக்கான "பாதை வரைபடம்" ஒன்று வரைபு செய்யப்பட்டு அதை அமுல்படுத்துவது என்றும் இரு நாட்டுத் தூதுக்குழுக்களும் இணக்கம் கண்டுள்ளன.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் பங்குகொண்ட இலங்கைத் தரப்பிற்கு வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் உயங்கொட கலந்து கொண்ட அதேவேளை, இந்தியத் தரப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச்செயலாளர் ரீ.எஸ்.திருமூர்த்தி கலந்து கொண்டார்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் இந்த குழுவின் நடவடிக்கைகள் குறித்து நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளின் மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என்பது குறித்து இந்தியாவும் இலங்கையும் ஒத்த கருத்தை இந்தச் சந்திப்பின் போது வெளியிட்டன.

மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், எந்த கட்டத்திலும் பலாத்காரம் பிரயோகிக்கப்படக்கூடாது என்பது குறித்தும் இருதரப்பினரும் தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினர்.

இந்த நிலையில் இந்த வருடம் ஜனவரி மாதம் வன்செயல் காரணமாக கொல்லப்பட்ட இரண்டு இந்திய மீனவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக இலங்கைக் குழு தெரிவித்தது.

இதேவேளை 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் கடலில் வன்செயல்கள் குறைந்திருப்பதை அவதானித்தாகவும் இலங்கை இந்திய கூட்டுக்குழுவின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

04. 48 கிலோ கிராம் நிறையுள்ள பிள்ளையின் உயரம் யாது?

.............................................................................................................

05. ரவியின் நிறையைவிட பார்வதியின் நிறை எவ்வளவு அதிகம்?

.............................................................................................................

06. நிறைப்படி ஏறுவரிசைப்படுத்தினால் கடைசியில் நிற்பவரின் பெயரை எழுதுக.

.............................................................................................................

07. 2006.10.01 அன்று 20 வயதைப் பூர்த்தி செய்யும் பிள்ளையின் பெயரை எழுதுக.

.............................................................................................................

08. 2006.10.01 அன்று ரோஸியின் வயதை எழுதுக.

.............................................................................................................


**07. பின்வருவனவற்றின் விடையை எழுதுக.**

01. 15 லீற்றர் 400 மில்லி லீற்றர் கொண்ட பாலை சமனான இரண்டு பாத்திரத்தில் ஊற்றினால் ஒரு பாத்திரத்தில் உள்ள அளவு. ........................L ........................ml

02. 8 மீற்றர் துண்டுகள் 8 வெட்டிய பின்னர் 225 மீற்றர் துணியில் மிகுதி எவ்வளவு?

.............................................................................................................

03.




சரியான நேரத்தைவிட 45 நிமிடம் குறைவாக இக்கடிகாரம் காட்டுகிறதெனில், உண்மையான நேரத்தை எழுதுக.


04. பாடசாலை ஒன்று 16.20 மணிக்குத்தான் விடும் எனில் இந்நேரத்தைச் சாதாரண நேரத்தில் எழுதிக் காட்டவும்.

.............................................................................................................

05.

8cm

6cm



1. இச்சதுரக் கூடு ஒன்றின் பரப்பளவு ஒரு சதுர சென்ரி மீற்றர் எனில், இங்கு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு யாது?

.............................................................................................................

2. இச்சதுரக் கூட்டின் சுற்றளவு யாது?

.............................................................................................................

**08. பாடசாலை விடுமுறை ஆரம்பமாகிவிட்டது. நான் நண்பர்களுடன் மிகவும் மகிழ்ச்சியோடு மைதானத்திற்குச் சென்று விளையாடினேன். திடீரென எனது சட்டையின் பின்பக்கம் கிழிந்துவிட்டது.....என்பதைத் தொடர்ந்து 6 வசனங்கள் எழுதுக.**

01. .............................................................................................................

02. .............................................................................................................

03. .............................................................................................................

04. .............................................................................................................

05. .............................................................................................................

06. .............................................................................................................


எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சிபெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II

1மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

வெளியீடு 07



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**01) பின்வரும் பந்தியை வாசித்து விடை எழுதுக.**

ஒரு நாள் நரி ஒன்று உணவு தேடிக் காட்டில் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருக்கும்போது கால் தவறி பாழும் கிணறொன்றில் விழுந்துவிட்டது. எவ்வளவு முயன்றும் அதனால் கிணற்றில் இருந்து வெளியேற முடியவில்லை. எனவே சற்று நேரம் அக்கிணற்றினுள் அமைதியாக இருந்தது. சிறிது நேரத்தில் அவ்வழியாகச் சென்ற முயல், நரி ஒன்று கிணற்றினுள் இருப்பதைக் கண்டு, இது ஏதோ தந்திரத்தில் ஒழிந்து கொண்டிருப்பதாக நினைத்து வேகமாக அங்கிருந்து சென்றுவிட்டது. இன்னும் சிறிது நேரத்தில் அந்தப் பக்கமாக வந்த ஆடொன்று நரியைக் கண்டு, ஏனப்பா இதற்குள் அமர்ந்திருக்கிறாய்? என அன்பாகக் கேட்டது. அதற்கு அந்த நரி, இக்கிணற்று நீர் மிகச் சுவையாகவுள்ளது. குடிக்கக் குடிக்கச் சுவையாக உள்ளது என்றது. ஆடும் எதையும் சிந்திக்காமல் அக்கிணற்றினுள் குதித்தது.

01. இப்பந்தியின்படி வேண்டுமென்றே துன்பத்தில் விழுந்தது யார்?

.............................................................................................................

02. என்ன செய்து கொண்டிருக்கும்போது நரி கிணற்றினுள் விழுந்தது?

.............................................................................................................

03. இங்கு குறிக்கப்பட்டுள்ள விலங்குகளில் தந்திரமுள்ள விலங்கு எது?

.............................................................................................................

04. முயல் எவற்றை உணவாகக் கொள்ளும்?

.............................................................................................................

05. ஆடு ஏன் கிணற்றினுள் குதித்தது?

.............................................................................................................

06. பின்வரும் சொற்களை எதிர் காலத்தில் எழுதுக.

1. விட்டது :........................................

2. கண்டு :........................................

07. ஆடுகள் கிணற்றில் குதித்தன என்பதை ஒருமையாக மாற்றி எழுதுக.

.............................................................................................................

08. நரி உணவு தேடியது என்பதைப் பன்மையாக மாற்றி எழுதுக.

.............................................................................................................

09. பின்வருவனவற்றுக்கு ஒத்த கருத்துள்ள சொற்கள் எழுதுக.

1. மறைத்து :........................................

2. சிறிது :........................................

10. இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களை இட்டு வசனத்தைப் பூரணப்படுத்துக.
ஆட்டின் முதுகின் மீது ஏறிய .................................................................வந்தது.

11. ஆட்டின் செயலைக் குறிக்கும் பழமொழி ஒன்றை எழுதுக.

.......................................................................................................

12. கிணற்றில் இருந்து வெளியே வந்த நரியைப் பார்த்து ஆடு கூறிய வசனம் ஒன்றை எழுதுக.

.......................................................................................................

**02. பின்வரும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள சொற்களை அமைக்க.**

1. o, k, o, s, b, ..............................
2. m, a, t, s, p, ..............................
3. a, g, n, m, o, ..............................
4. று, மு, க, ஆ, ம், ..............................
5. லை, தி, கோ, ம, ண, ரு, ..............................
6. ணா ச, ல, ர, ம். ய, ..............................
7. ச், வீ, வெ, ச, டு, ளி, ..............................
8. ரோ, ரி, ப, ப, கா ..............................

**03. பின்வரும் ஒவ்வொன்றுக்கும் தனியொரு சொல் எழுதுக.**

1. ஒருவர் பிறந்த நாடு :..............................
2. பெண் குரங்கு:..............................
3. நீரிலும் நிலத்திலும் வாழ்தல்:..............................
4. தலையில்லாத உடல்:..............................
5. யானையின் மலம்:..............................


**04. பின்வருவனவற்றின் கருத்தை எழுதுக.**

1. தான் தோன்றி
2. வயிற்றிலடித்தல்
3. பித்தலாட்டம்
4. கருதுகோள்

**05. மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தலைக்குரியது.
1. ஒரு ஆடு 2. ஒரு மாடு 3. ஒரு முயல்


2. .............................. மூக்குப் போன்றது என்பர். இங்கு இடைவெளியில் வரவேண்டியது.
1. கொக்கின் 2. சிட்டுக்குருவியின் 3. கிளியின்


3. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள பாதத்துக்குரியது.
1. ஒரு யானை 2. ஒரு மாடு 3. ஒரு ஒட்டகம்


4. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தலைக்குரியது.
1. ஒரு கொக்கு 2. ஒரு காகம் 3. ஒரு பருந்து







5. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள கோள்.
1. புதன் 2. சனி 3. வெள்ளி

6. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள சந்திரனைக் காணும் இரவு.
1. பௌர்ணமி 2. அமாவாசை 3. அமாவாசைக்குப் பின்

7. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தாவரம்.
1. கரும்பு 2. மூங்கில் 3. நெல்

8. 
இப்பூவில் எத்தனை இதழ்கள் உள்ளன?
1. ஐந்து 2. இரண்டு 3. ஒன்று

9. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள இலையானது,
1. வெண்டிக்காய் மரத்தினது 2. மரவள்ளி மரத்தினது 3. கத்தரி மரத்தினது

10. 
இப்படத்தில் காட்டப்பட்டுள்ள கிணறு.
1. ஆழக்கிணறு 2. துலாக்கிணறு 3. பாழுங்கிணறு

11. இவ்வாறான கிணறுகள் காணப்படும் பிரதேசம்.
1. கரையோரம் 2. மத்திய மலைநாடு 3. ஆற்றோரம்

12. மேலேயுள்ள கிணற்றின் செயற்பாட்டைப் பின்வரும் எதனுடன் ஒப்பிடலாம்?
1. சில்லு 2. இயந்திரம் 3. நெம்புகோல்

13. 
இப்படத்தின்படி இப்பிள்ளையின் நிலை?
1. நிமிர்ந்த 2. சீரான 3. கவனமான

12. பின்வருவனவற்றுள் சுவட்டு நிகழ்ச்சி எது?
1. நாட்டுக்குக் குறுக்காக ஓடுதல் 2. உயரம் பாய்தல் 3. 100 மீற்றர் ஓட்டம்

13. நாயின் வாலை இலகுவில்
1. நிமிர்த்த முடியாது 2. நிமிர்த்தவே முடியாது 3. நிமித்தலாம்

**06. சில பிள்ளைகளின் விபரங்களை இவ்வட்டவணை காட்டுகின்றது. அதனுதவியுடன் வினாக்களுக்கு விடை தருக.**

| பெயர் | பிறந்த திகதி | உயரம் | நிறை |
|---|---|---|---|
| ரவி | 1985.08.24 | 104cm | 32kg |
| சுமதி | 1985.09.02 | 110cm | 30kg |
| பார்வதி | 1986.01.10 | 90cm | 48kg |
| நசார் | 1986.10.01 | 1m 15cm | 32kg |
| பேபி | 1986.04.08 | 1m 18cm | 27kg |
| ரோஸ் | 1987.12.31 | 85cm | 23kg |

1. வயதில் மிகக் குறைந்த பிள்ளையின் பெயர் என்ன?
..............................
2. வயது கூடிய பிள்ளையின் பெயர் என்ன?
..............................
3. பேபியின் உயரத்தை சென்ரிமீற்றரில் தருக.
..............................